8.4 அனைத்து கட்டிடங்கள் மற்றும் வியாபார நிலையங் களில் குப்பைத் தொட்டிகள் இருக்கவேண்டிய அதேவேளை குப்பைகள் அதனுள் இடப்படுதல் வேண்டும்.

8.5 விற்பனைக்காக வைத்திருக்கும் தயாரிக்கப்பட்ட அனைத்து உணவுப் பொருட்களையும் ஈக்களிடம் இருந்து பாதுகாக்க மூடியிடப்பட்ட பெட்டிகளில் வைத்திருத்தல் வேண்டும்.

டீ. எஸ். பத்மகுலசூரிய
மாவட்டச் செயலாளர்/
அரசாங்க அதிபர் மற்றும் கதிர்காம
ஆடி மகோற்சவ பாசறைப் பொறுப்பதிகாரி.
மொணராகலை மாவட்டம்.

மாவட்டச் செயலகம்,
மொணராகலை,
2018, மே 11.

6-595/2

---

**யாத்திரைகள் கட்டளைச் சட்டம்**
**(175 ஆம் அத்தியாயம்)**

றுஹுணு கதிர்காமம் மகா தேவாலய ஆடி மகோற்சவம் - 2018

மேற்குறிப்பிட்ட உற்சவம் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி தொடக்கம் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி வரை நடைபெறுமென பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகிறேன்.

கீழ்க் குறிப்பிட்டுள்ள அரச வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் இக்காலத்தில் நடைமுறையில் இருக்கும் என இத்தால் அறியத்தருகின்றேன்:-

1948, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க அரச வர்த்தமானி;
1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க அரச வர்த்தமானி;
1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11255 ஆம் இலக்க அரச வர்த்தமானி ;
1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12508 ஆம் இலக்க அரச வர்த்தமானி ;
1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12947 ஆம் இலக்க அரச வர்த்தமானி.

டீ. எஸ். பத்மகுலசூரிய,
மாவட்டச் செயலாளர்/
அரசாங்க அதிபர் மற்றும் கதிர்காம
ஆடி மகோற்சவ பாசறைப் பொறுப்பதிகாரி.
மொணராகலை மாவட்டம்.

மாவட்டச் செயலகம்,
மொணராகலை,
2018, மே 11.

6-595/1

---

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

**நிதி நிலைமைக் கூற்று**

**31 திசெம்பர் 2016 இல் உள்ளவாறாக**

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | **குறிப்பு** | ரூபா | ரூபா |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பண மற்றும் பணச்சமநிலை | 2 | 74,631,205 | 76,295,157 |
| வரவுகள் | 3 | 10,107,189 | 2,420,856 |
| பணியாளர்களுக்கான கடன் மற்றும் முற்பணம் | 4 | 16,979,412 | 16,626,260 |
| பெறத்தக்க காப்பீடுகள் | | 2,650,000 | - |
| சரக்கிருப்பு | 5 | 15,864,779 | 15,518,407 |
| பழைய சரக்குகள் அகற்றப்படுதல் | | 54,032 | 471,590 |
| வேறு முற்பணங்கள் | 6 | 40,837,394 | 2,959,822 |
| | | 161,124,012 | 114,292,091 |

| சொத்துக்கள் *(தொடர்ச்சி)* | குறிப்பு | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| பணியாளர்களுக்கான கடன் மற்றும் முற்பணம் | 4 | 50,958,242 | 47,292,032 |
| வைப்புகள் | 7 | 57,937,588 | 48,558,134 |
| கால்நடை | 8 | 1,587,060 | 1,507,065 |
| அறிவு மேம்பாடு | 9 | 8,870,233 | 2,330,454 |
| பாடத்திட்டத் திருத்தம் | 10 | 1,490,893 | 1,769,948 |
| உள்ளார்ந்த சொத்துக்கள் (தேறிய) | 11 | 10,661,714 | - |
| நடந்து கொண்டிருக்கும் வேலைகள் | 12 | 57,074,402 | 8,770,006 |
| சொத்து, தொழிற்கூடம் மற்றும் உபகரணங்கள் (தேறிய) | 13 | 2,102,556,299 | 2,138,270,176 |
| | | 2,291,136,432 | 2,248,497,815 |
| **மொத்த சொத்துக்கள்** | | 2,452,260,444 | 2,362,789,906 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| திரண்ட செலவுகள் | 14 | 76,089,918 | 66,600,459 |
| செலுத்தப்பட்டவைகள் | 15 | 73,305,475 | 74,338,071 |
| மீள்செலுத்த வேண்டிய வைப்புகள் மற்றும் நிதிகள் | 16 | 72,285,924 | 50,403,438 |
| பணிக்கொடை வழங்கல் | 17 | 2,549,845 | 2,481,693 |
| BOC குத்தகைதாரர் பொறுப்பு | 18 | 6,990,010 | 6,976,250 |
| | | 231,221,172 | 200,799,911 |
| **நடைமுறைப் பொறுப்புகள் அல்லாதவை** | | | |
| பணிக்கொடை வழங்கல் | 17 | 130,985,437 | 106,781,357 |
| BOC குத்தகைதாரர் பொறுப்பு | 18 | 11,886,883 | 17,995,628 |
| **மொத்தப் பொறுப்புகள்** | | 142,872,319 | 124,776,985 |
| | | **374,093,491** | **325,576,896** |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **2,078,166,953** | **2,037,213,011** |
| **தேறிய சொத்துக்கள்/திரவச் சொத்துக்கள்** | | | |
| மூலதன மானியம் | 19 | 2,196,294,678 | 2,177,645,959 |
| வேறு கையிருப்புகள் | 20 | 58,761,861 | 58,761,861 |
| திரண்ட உபரிகள் /(பற்றாக்குறைகள்) | 21 | (229,983,808) | (262,508,156) |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் | 22 | 33,840,026 | 41,834,254 |
| நன்கொடைகள் | | 19,254,197 | 21,479,095 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/திரவச் சொத்துக்கள்** | | **2,078,166,953** | **2,037,213,013** |

இந்த நிதிக்கூற்றானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் மற்றும் பிற சட்ட விதிமுறைகளின் தேவைகளுடன் இணக்கமாக உள்ளன.

கே. ஏ. ஆர். எஸ். ஜயகொடி,
நிதியாளர்.

இந்த நிதி அறிக்கையைத் தயாரிப்பதற்கும், சமர்ப்பிப்பதற்கும் பல்கலைக்கழக பேரவையானது முழுப்பொறுப்பையும் ஏற்று அதன் சார்பாக ஒப்பமிட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஒப்பம்: பேராசிரியர் சந்தன பீ. உடவத்த, உப வேந்தர். | எம்.எப்.எச். கரீம், பதிவாளர். | திரு. என்.எஸ்.எம்.பீ. ரன்ஜித், பேரவை உறுப்பினர். |

09 முதல் 16 பக்கங்கள் கணக்குப் பதிவியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதி அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

2017.02.28

**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**

**நிதி நிலமைக் கூற்று**

**31 திசம்பர் 2016 இல் உள்ளவாறாக**

| வருவாய் | குறிப்பு | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| மீண்டெழும் மானியம் | | 1,018,900,000 | 891,508,158 |
| சகாயநிதி மற்றும் மஹபொல மானியம் | 23 | 109,496,600 | 84,785,850 |
| சுய நிதித்திட்ட வருமானம் | 24 | 34,291,545 | 42,611,094 |
| வேறு வருமானம் | 25 | 32,023,357 | 20,905,324 |
| வருவாய் வேறுபாடுகள் | 26 | 258,028,279 | 220,202,868 |
| **மொத்த வருவாய்** | | **1,452,739,781** | **1,260,013,294** |
| **இயக்கச் செலவுகள்** | | | |
| ஆளனி ஊதியங்கள் | 27-A | 763,189,206 | 708,455,851 |
| போக்குவரத்து மற்றும் படிகள் | 27-B | 5,475,750 | 2,062,833 |
| வழங்கல் மற்றும் நுகர்வுகள் | 27-C | 51,793,196 | 51,096,797 |
| பராமரிப்புச் செலவுகள் | 27-D | 18,036,147 | 14,017,591 |
| ஒப்பந்த சேவைகள் | 27-E | 132,521,905 | 129,455,973 |
| வேறு மீண்டெழும் செலவுகள் | 27-F | 48,766,095 | 34,724,215 |
| நுய நிதித்திட்ட செலவுகள் | 27-G | 22,661,106 | 24,907,182 |
| சகாயநிதி மற்றும் மஹபொல | 27-H | 109,496,600 | 88,998,550 |
| தேய்மானம் மற்றும் நிலைமாறும் செலவுகள் | 27-I | 264,225,171 | 228,905,365 |
| **மொத்த செலவீனம்** | | **1,416,165,176** | **1,282,624,358** |
| **உபரி /(பற்றாக்குறை) காலம்** | | **36,574,605** | **(22,611,064)** |
| புத்தளை கட்டடங்களை அகற்றுவதில் இழப்பு | | - | (316,251) |
| நீர் காவியை அகற்றுவதில் இழப்பு | | 2,650,000 | |
| **தேறிய உபரி /(பற்றாக்குறை) காலம்** | | **39,224,605** | **(22,927,315)** |

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
## 31.12.2016 வருட முடிவிற்கான நிதிப்பாய்ச்சல் கூற்று

| | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து நிதிப்பாய்ச்சல் கூற்று** | | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உபரி /(பற்றாக்குறை)** | **39,224,605** | **(47,478,718)** |
| **சரிசெய்யப்பட்டவைகள்** | | |
| **பணமல்லாத இயக்கங்கள்** | | |
| சொத்துத் திட்டம் மற்றும் உபகரணங்களின் தேய்மானம் | 248,124,273 | 226,539,484 |
| நிலைமாறு செலவுகள் | 16,100,898 | - |
| பணிக்கொடை வழங்கல் | 26,575,265 | 12,065,470 |
| சரக்கு இரத்துச் செய்தல் | 417,558 | - |
| கால்நடைகளின் மதிப்பில் இழப்பு (உபரி) | (79,995) | 152,655 |
| மோட்டார் வாகனங்களை அகற்றுவதில் இழப்பு /ஆதாயம் | (2,650,000) | 316,251 |
| குத்தகை வட்டி | 2,244,287 | 516,413 |
| வட்டி வருமானம் | (8,042,860) | - |
| வரவிருக்கும் வருமானம் | (258,028,279) | (219,171,888) |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்படும்பணப்புழக்கம்** | **63,885,751** | **(27,060,603)** |
| சரக்குகளை அதிகரித்தல் /குறைத்தல் | (346,373) | 1,724,870 |
| வேறு நடைமுறைச் சொத்துக்களை அதிகரித்தல் /குறைத்தல் | (45,477,506) | 1,630,228 |
| நடைமுறைப் பொறுப்புக்களை அதிகரித்தல் /குறைத்தல் | 30,339,349 | (11,101,839) |
| பணிக்கொடைக்கான கொடுப்பனவு | (2,303,033) | (1,742,182) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப்பாய்ச்சல்** | **46,098,189** | **(36,549,526)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிதிப்பாய்ச்சல் (பயன்படுத்தல்)** | | |
| சொத்து ஆலை மற்றும் உபகரணங்களை கையகப்படுத்தல் | (152,930,989) | (84,392,777) |
| உள்ளார்ந்த சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் | (10,100,000) | - |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிக்கான கொடுப்பனவு | (62,510,486) | - |
| கடன் கொடுப்பனவு | (24,164,891) | (18,408,337) |
| கடன் மீட்டல் | 20,079,703 | 20,354,997 |
| காப்புறுதிப் பெறுகை | - | 5,904,050 |
| வரி வருமானம் | 8,042,860 | - |
| வைப்பு, ARD, பாடவிதான திருத்தங்களுக்கான கொடுப்பனவு | (3,854,750) | - |
| ஆய்வு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு | (9,103,210) | - |
| நடைமுறைச் சொத்துக்கள் | - | (9,117,839) |
| ஆண்டிற்கான மூலதன மானியம் | 195,000,000 | 167,300,000 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப்பாய்ச்சல்** | **(39,541,764)** | **81,640,094** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து நிதிப்பாய்ச்சல்** | | |
| பண நன்கொடை பெறுதல் | - | 12,548,743 |
| குத்தகைக்கு வழங்குனரின் மூலதனக் கொடுப்பனவு | (6,324,985) | (4,004,268) |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதிகளின் பெறுகை | 1,096,129 | 6,397,165 |

| | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|
| கட்டுப்படுத்தப்பட்ட நிதிகளின் கொடுப்பனவு | (2,991,521) | (3,390,305) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய நிதிப்பாய்ச்சல்** | **(8,220,377)** | **11,551,335** |
| பணம் மற்றும் பண நிகராகவும் தேறிய அதிகரிப்பு /(குறைப்பு) | (1,663,952) | **56,641,902** |
| ஆண்டு தொடக்கத்தில் பணம் மற்றும் பண நிகர் | 76,295,157 | 19,653,255 |
| **ஆண்டு முடிவில் பணம் மற்றும் பண நிகர்** | **74,631,205** | **76,295,157** |

**குறிப்பு அ**

| | | |
|---|---|---|
| பணம் மற்றும் பணத்திற்கு இணையானவைகள் | | |
| பணம் மற்றும் வங்கி மீதி | **74,631,205** | **76,295,157** |

**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**

**2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதிச் செயற்திறன் ஒப்பீட்டு அறிக்கை**

| <u>வருவாய்</u> | குறிப்பு | 2016 உண்மையான ரூபா | 2015 வரவு செலவு திட்டம் ரூபா |
|---|---|---|---|
| மீண்டெழும் மானியம் | | 1,018,900,000 | 1,024,000,000 |
| சகாயநிதி மற்றும் மஹபொல மானியம் | 23 | 109,496,600 | 109,496,600 |
| சுய நிதித்திட்ட வருமானம் | 24 | 34,291,545 | 15,500,000 |
| வேறு வருமானம் | 25 | 32,023,357 | 14,186,000 |
| வருவாய் வேறுபாடுகள் | 26 | 258,028,279 | - |
| **மொத்த வருவாய்** | | **1,452,739,781** | **1,163,182,600** |
| **<u>இயக்கச் செலவுகள்</u>** | | | |
| ஆளனி ஊதியங்கள் | 27-A | 763,189,206 | 771,571,000 |
| போக்குவரத்து மற்றும் படிகள் | 27-B | 5,475,750 | 2,800,000 |
| வழங்கல் மற்றும் நுகர்வுகள் | 27-C | 51,793,196 | 58,400,000 |
| பராமரிப்புச் செலவுகள் | 27-D | 18,036,147 | 9,500,000 |
| ஒப்பந்த சேவைகள் | 27-E | 132,521,905 | 136,550,000 |
| வேறு மீண்டெழும் செலவுகள் | 27-F | 48,766,095 | 59,365,000 |
| நுய நிதித்திட்ட செலவுகள் | 27-G | 22,661,106 | 15,500,000 |
| சகாயநிதி மற்றும் மஹபொல | 27-H | 109,496,600 | 109,496,600 |
| தேய்மானம் மற்றும் நிலைமாறும் செலவுகள் | 27-I | 264,225,171 | - |
| **மொத்த செலவீனம்** | | **1,416,165,176** | **1,163,182,600** |
| உபரி/(பற்றாக்குறை) காலம் | | **36,574,605** | - |
| தேறிய உபரி/(பற்றாக்குறை) காலம் | | **36,574,605** | - |

**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**

## தேறிய சொத்து /திரவத் சொத்தானது 2016.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டின் மாற்றங்கள் பற்றிய அறிவிப்பு

| கட்டுப்பாட்டு நிறுவனத்தின் உரிமையாளர்களிடமிருந்தான பண்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம் | வேறு கையிருப்புகள் | திரண்ட உபரி/ பற்றாக்குறை | மொத்தம் | சிறு வட்டி | மொத்தத் தேறிய சொத்து |
| **31.12.2015 இல் உள்ளவாறான மீதி** | 2,244,083,919 | 58,761,861 | (285,866,170) | 2,016,979,610 | - | 2,016,979,610 |
| கணக்கியல் கொள்கை மற்றும் பிழைகள் | | | 16,657,756 | 16,657,756 | | 16,657,756 |
| 01.01.2016 இல் மீதமுள்ள இருப்புகள் | 2,244,083,919 | 58,761,861 | (269,208,414) | 2,033,637,366 | - | 2,033,637,366 |
| | 5,304,982 | - | | 5,304,982 | - | 5,304,982 |
| **2016 க்கு நிகர சொத்துக்கள் / பங்குகளின் மாற்றங்கள்** | - | | - | - | - | - |
| சொத்து மீளாய்வின் இழப்பு /ஏற்பு முதலீடுகளின் மதிப்பீட்டைப் பெறுதல் | - | - | - | - | - | - |
| வெளிநாட்டு நடவடிக்கைகளை மொழி பெயர்ப்பதில் பரிமாற்ற வேறுபாடுகள் | - | - | - | - | - | - |
| தேறிய சொத்து மற்றும் திரவத் சொத்தில் தேறிய வருமானமும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேறிய சொத்தும் | - | - | - | - | - | |
| பற்றாக்குறைக் காலம் | - | - | 39,224,605 | 39,224,605 | - | 39,224,605 |
| காலத்திற்கான மொத்த அங்கீகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் செலவுகள் | - | - | - | - | - | - |
| **31.12.2016 இல் மீதி** | **2,249,388,901** | **58,761,861** | **(229,983,808)** | **2,078,166,954** | - | **2,078,166,954** |

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - மாணவரொருவருக்கான செலவு - 2016

| | | | பீடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தச் செலவு 2016 | ஏற்றுக் கொள்ளும் முறை | விவசாயம் | பிரயோக விஞ்ஞானம் | முகாமைத் துவம் | சமூக விஞ்ஞானம் | புவியியல் |
| மாணவர் தொகை | 3758 | | 304 | 944 | 1303 | 957 | 250 |
| நேரடிச் செலவு | 607,884,425 | நேரடி | 139,099,419 | 145,241,185 | 113,823,240 | 145,426,376 | 64,294,205 |
| மாணவரொருவருக்கான நேரடிச் செலவு | 161,757 | | 457,564 | 153,857 | 87,355 | 151,961 | 257,177 |

**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்** *(தொடர்ச்சி)*

| | மொத்தச் செலவு 2016 | ஏற்றுக் கொள்ளும் முறை | பீடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | விவசாயம் | பிரயோக விஞ்ஞானம் | முகாமைத் துவம் | சமூக விஞ்ஞானம் | புவியியல் |
| நேரடி நிருவாகச் செலவு | | | | | | | |
| பொது | 102,046,127 | மாணவர் தொகை | 8,254,929 | 25,633,726 | 35,382,146 | 25,986,733 | 6,788,593 |
| நிதி வழங்கல் | 18,398,156 | மாணவர் தொகை | 1,488,302 | 4,621,570 | 6,379,137 | 4,685,214 | 1,223,933 |
| போக்குவரத்து | 9,476,502 | மாணவர் தொகை | 766,593 | 2,380,473 | 3,285,759 | 2,413,255 | 630,422 |
| பாதுகாப்பு | 40,526,867 | மாணவர் தொகை | 3,278,384 | 10,180,245 | 14,051,758 | 10,320,439 | 2,696,040 |
| | 41,754,166 | மாணவர் தொகை | 3,377,665 | 10,488,540 | 14,477,296 | 10,632,979 | 2,777,685 |
| **மொத்தம்** | **212,201,818** | | **17,165,874** | **53,304,555** | **73,576,096** | **54,038,622** | **14,116,672** |
| | | | | | | | |
| மாணவரொருவருக் கான நேரடி நிருவாகச் செலவு | 56,467 | | 56,467 | 56,467 | 56,467 | 56,467 | 56,467 |
| கல்விசார் சேவைகள் | | | | | | | |
| பரீட்சைகள் | 15,941,633 | மாணவர் தொகை | 1,289,584 | 4,004,497 | 5,527,394 | 4,059,644 | 1,060,513 |
| நூலகம் | 22,611,721 | மாணவர் தொகை | 1,829,155 | 5,680,006 | 7,840,094 | 5,758,227 | 1,504,239 |
| கல்வி தொழில்நுட்பம் | 19,160,762 | மாணவர் தொகை | 1,549,992 | 4,813,134 | 6,643,553 | 4,879,417 | 1,274,665 |
| சுகாதாரம் உடற்கல்வி | 3,279,870 | மாணவர் தொகை | 265,322 | 823,895 | 1,137,219 | 835,241 | 218,193 |
| பணியாள் மற்றும் | 11,241,293 | மாணவர் தொகை | 909,354 | 2,823,784 | 3,897,660 | 2,862,671 | 747,824 |
| மாணவ நலன்புரி காணி | 131,328,919 | மாணவர் தொகை | 10,623,734 | 32,989,489 | 45,535,280 | 33,443,793 | 8,736,623 |
| மற்றும் கட்டடங்கள் | 51,491,851 | மாணவர் தொகை | 4,165,387 | 12,934,621 | 17,853,614 | 13,112,746 | 3,425,482 |
| மின்சாரம் | 25,186,054 | மாணவர் தொகை | 2,037,403 | 6,326,672 | 8,732,684 | 6,413,798 | 1,675,496 |
| நீர் | 943,731 | மாணவர் தொகை | 76,342 | 237,063 | 327,217 | 240,328 | 62,781 |
| இயற்கை அழகுபடுத்தல் | 1,295,302 | மாணவர் தொகை | 104,782 | 325,377 | 449,116 | 329,857 | 86,170 |
| அலகு துணை நடவடிக்கைகள் | 15,400,936 | மாணவர் தொகை | 1,245,845 | 3,868,676 | 5,339,920 | 3,921,952 | 1,024,543 |

**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - மாணவரொருவருக்கான செலவு - 2016**

| | மொத்தச் செலவு 2016 | ஏற்றுக் கொள்ளும் முறை | பீடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | விவசாயம் | பிரயோக விஞ்ஞானம் | முகாமைத் துவம் | சமூக விஞ்ஞானம் | புவியியல் |
| மொத்தம் | 297,882,071 | | 24,096,900 | 74,827,215 | 103,283,752 | 75,857,675 | 19,816,529 |
| மாணவரொருவருக்கான கல்விசார் செலவுகள் | 79,266 | | 79,266 | 79,266 | 79,266 | 79,266 | 79,266 |
| மொத்த செலவு | 1,117,968,314 | | 180,362,192 | 273,372,955 | 290,683,088 | 275,322,672 | 98,227,406 |
| மாணவரொருவருக்கான | 297,490 | | 593,297 | 289,590 | 223,088 | 287,693 | 392,910 |

**1. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்**

**1.1. பொதுவான கொள்கைகள்**

**1.1.1. அறிக்கையிடும் நிறுவனம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளதுடன் த.பெ. இல. 02, வெலிஹுல்ஓயவில் அமையப்பெற்றுள்ளது. பிரதானமாக இது அரச நிதிகளில் இயங்கும் ஒரு தேசிய பல்கலைக்கழகமாகும்.*

**1.1.2. பிரதான நடவடிக்கைகளும் நடவடிக்கைகளின் தன்மைகளும்**

இப்பல்கலைக்கழகமானது விவசாய விஞ்ஞானங்கள், சமூக விஞ்ஞானங்கள், பிரயோக விஞ்ஞானங்கள், முகாமைத்துவக் கற்கைகள் ஆகிய துறைகளில் முதன்மையான உள்ளூர் மாணவர்களுக்கு உதவுகின்றது. இப்பல்கலைக்கழகமானது உயர் கல்விகளையும் ஆய்வுகளையும் ஊக்குவிக்கின்றது. பட்டதாரிக் கற்கைகள் பீடமானது அதன் இயக்கத்தை 2016 இல் ஆரம்பித்தது.

**1.1.3. சரிசெய்தல் அடிப்படையிலானது**

**(அ) உடன்பாட்டு அறிக்கை**

நிதிக் கூற்றில் நிதி நிலைமையின் கூற்று, நிதி செயற்பாட்டுக் கூற்று, பங்கு மாற்றங்களின் கூற்று, நிதிப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றின் குறிப்புகள் என்பன அடங்கும்.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் இலங்கை பொதுத் துறை கணக்கியல் தரத்திற்கு ஏற்ப கணக்குகளின் உண்மையான அடிப்படையில் இணக்கமாக தயாரிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கணக்கியல் கொள்கைகளும் முந்தைய ஆண்டின் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளன, அவற்றில் தற்போதைய ஒப்பீட்டு புள்ளி விபரங்களை வழங்குவதற்கு ஏற்ப ஒப்பீட்டு புள்ளி விபரங்களில் மாற்றங்களைச் சரிசெய்துள்ளது.

**(ஆ) அளவீட்டின் அடிப்படை**

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரய வழக்கத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு அது கூறப்பட்ட இடங்களில் தவிர பண மதிப்புகளில் கணக்கு மாற்றங்கள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**(இ) செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்துகை நாணயம்**

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன, இது பல்கலைக்கழகத்தினுடைய செயற்பாட்டு முன்னிலைப்படுத்துகை நாணயமாகும்.

**(ஈ) கவனிப்பு :**

நிதிக் கூற்றுக்கள் ஒரு கவனிப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.2. சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டுத் தளங்கள்**

**1.2.1. சொத்து, தொழிற்கூடம் மற்றும் உபகரணங்கள்**

நிலங்கள், கட்டடங்கள், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், பொருத்தப்பட்ட மற்றும் பொருத்தல்கள், நூலக புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள், மோட்டார் வாகனங்கள், பட்டமளிப்பு அங்கிகள் மற்றும் அரச நிதிக்கப்பால் கிடைக்கப் பெற்றவைகளான ஆராய்ச்சி நிதிகள், உள்ளகரீதியில் சம்பாதித்த நிதிகள் மற்றும் நன்கொடைகள் என்பன உள்ளடங்கலான ஏனைய சொத்துக்கள்.

**(அ) அங்கீகாரம் மற்றும் அளவீட்டு அடிப்படை**

சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள், பொருளுக்கு பாய்ச்சல் மற்றும் உருப்படியின் செலவு ஆகியவை சாத்தியமான முறையில் அளவிடப்படலாம் எனில், சொத்து, தொழிற்கூடம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சொத்துக்கள், தொழிற்கூடம் மற்றும் உபகரணங்கள் விலை குறைவான திரட்டப்பட்ட தேய்மானத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சொத்து, தொழிற்கூடம் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் கொள்வனவு அல்லது கட்டுமான செலவினம் இடைப்பட்ட செலவையும் சேர்த்து உள்ளடக்கியுள்ளது.

**(ஆ) செலவு**

சொத்து, தொழிற்கூடம் மற்றும் உபகரணங்களின் செலவானது அதன் கொள்முதல் அல்லது கட்டுமானச் செலவு மற்றும் ஏதாவது வேலை செய்யும் நிலையிலுள்ள நேரடியாகக் கூறக்கூடிய செலவினத்தையும் உள்ளடக்கியுள்ளது.

**(இ) தற்போதுள்ள நிலையான சொத்துக்களின் மீதான அடுத்தடுத்த செலவு**

*பின்வருவனவற்றுள் ஏதாவதொரு நிபந்தனையுடன் ஒத்துப் போனாலன்றி, உறுதியான நிலையான சொத்துக்களில் ஏற்படும் செலவினம் அது ஏற்படும் காலத்தில் நிதி செயற்திறன் அறிக்கைக்கு விதிக்கப்படுகின்றது, எந்த சூழ்நிலையில் அது மூலதனமாக்கப்பட்டும், மதிப்புக் குறைக்கப்பட்டும் அதற்கான அடிப்படையிலேயே உள்ளது.*

- *நிலையான சொத்துக்களின் சந்தை மதிப்பு தொடர்ந்து அதிகரித்துள்ளது.*
- *சொத்துத் திறன் அதிகரிப்பு*
- *வெளியீட்டுத் தரம் அல்லது இயக்க செலவில் குறைப்பு ஆகியவற்றில் நிலையான முன்னேற்றம்.*
- *சரிசெய்தல் மற்றும் பராமரித்தல் மூலம் உறுதிப்படுத்தியதை விட சொத்தின் பயன்படு காலம் குறிப்பிடத்தக்க நீடிப்பு*

**(ஈ) தேய்மானம்**

*சொத்து, தொழிற்கூடம் மற்றும் உபகரணங்களின் பயன்தரும் காலத்தினை மதிப்பீடு செய்து ஒரு நேர்த்தியான வழிமுறையின் மீது நிதி செயற்திறன் அறிக்கையில் தேய்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிலங்களுக்கு தேய்பெறுமானம் என்பது இல்லை. மதிப்பிடு செய்யப்பட்ட பயன்தரும் காலங்கள் பின்வருமாறு:*

| **விளக்கம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரும் காலங்கள்** |
|---|---|
| *கட்டடங்கள்* | *20 வருடங்கள்* |
| *நீர் சுத்திகரிக்கும் தொழிற்கூடம்* | *20 வருடங்கள்* |
| *காரியாலய மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்* | *05 வருடங்கள்* |
| *கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள்* | *05 வருடங்கள்* |
| *நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்* | *05 வருடங்கள்* |
| *தொடர்பாடல் உபகரணங்கள்* | *05 வருடங்கள்* |
| *மோட்டார் வாகனங்கள்* | *05 வருடங்கள்* |
| *அங்கிகள்* | *05 வருடங்கள்* |
| *வேறு உபகரணங்கள்* | *05 வருடங்கள்* |

*தேய்மானமானது கொள்முதல் செய்த ஆண்டில் முழுமையாக விதிக்கப்பட அகற்றப்படுவதற்கான ஆண்டில் எந்த தேய்மானமும் விதிக்கப்படுவதில்லை. இம்முறைத் தேய்மானம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இல. 649 இல் உள்ள விகிதங்களைப் பயன்படுத்துவதன் மூலம் 2006 ஆம் நிதியாண்டிலும் எதிர்காலத்திலும் தொடரலாம் என நம்புகின்றது. மேலும் இத்தேய்மான கணிப்பீட்டு முறையானது 2007.01.20 ஆந் திகதி நடைபெற்ற 117 ஆவது பேரவைக் கூட்டத்திலும் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.*

*எனவே, ரூபா. 2,650,000.00 க்கு சமமான தொகை நிதி நிலை அறிக்கையில் காப்புறுதிப் பெறுகையாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதோடு செலவு மற்றும் காப்புறுதிப் பெறுகைகளின் தேறிய மதிப்பு 2016 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் விதிக்கப்பட்டுள்ளது.*

**(உ) மூலதன வேலைகளின் போக்கு**

*மூலதன வேலை முன்னேற்றம் செலவாகக் காட்டப்படுகின்றது. இவை, மூலதன இயல்பில் நேரடியான சொத்துக்களின் கட்டுமானம், தொழிற்கூடம் மற்றும் உபகரணங்களின் மூலதனத்திற்காக காத்திருக்கின்றன. மூலதன வேலை முன்னேற்றமானது அது பயன்படுத்தப்படும் போது சொத்துக்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்களின் சொத்து சார்பான வகைக்குள் மாற்றப்படும். உதாரணமாக: அதன் இடம் மற்றும் நிபந்தனைகள் அவசியமாகும் போது பல்கலைக்கழகத்தின் நோக்கம் திறனாகச் செயல்படும்.*

### 1.2.2. உள்ளார்ந்த சொத்துக்கள்

உள்ளாந்த சொத்துக்களின்மதிப்பு நம்பகமான அளவில் அளவிடப்படும் போது மாத்திரமே அது அங்கீகரிக்கப் படுகின்றது.

மேலும் இதன் மூலம் நிறுவனத்தின் சாதகமான ஓட்டத்திற்கு எதிர்கால பொருளாதார நன்மைகள் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தனியாக வாங்கிய உள்ளார்ந்த சொத்துக்கள் விலைக்கு ஆரம்ப அங்கீகாரத்தில் அளவிடப்படுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து உள்ளார்ந்த சொத்துக்கள் குறைந்த செலவில் ஏனைய திரட்டப்பட்ட நாணயமாக்கல் மற்றும் திரட்டப்பட்ட இழப்புகளில் மேற்கொள்ளப்படுகின்றன. சொத்துக்களில் உள்ள எதிர்கால பொருளாதார நலன்களை அதிகரிக்கும் போது, அடுத்தடுத்த செலவினங்கள் மூலதனமாக்கப்படும். வேறு எல்லா செலவினங்களும் வரவிருக்கும் செலவுகளாகும்.

எல்லா உள்ளார்ந்த சொத்துக்களும் ஒரு வரையறுக்கப்பட்ட பயனுள்ள வாழ்வைக் கொண்டதாகக் கருதுவ தோடு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்வுகளின் மீதமுள்ள மதிப்பிற்குரிய சொத்துக்களின் செலவுகளை கீழே கணக்கிட நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

அ. கணினி மென்பொருளானது 5 வருட காலத்திற்குள் நேர்கோட்டு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
ஆ. 5 வருட காலத்திற்கு மேலான புதிய பாடத்திட்ட அபிவிருத்திக்கான செலவு புதிய பாடத்திட்டம் அமுலுக்கு வரும் தேதியில் இருந்து நேர்கோட்டு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

உள்ளார்ந்த சொத்துக்களாகக் பிரதிபலிக்கும் HETC மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருளின் கீழ் எழுதுதல் மதிப்பு மற்றும் தற்போதைய நிதியாண்டில் நிறுவனம் கொள்வனவு செய்த மென்பொருள் ஆகியவற்றைக் குறிக்கின்றன.

### 1.2.3. பாடத்திட்டத்தின் திருத்தம்

பல்கலைக்கழகமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களிலும் அனைத்து பட்டப்படிப்புகளுக்கான பாடத்திட்டத் தினையும் மறுசீரமைப்புச் செய்கின்றது. மற்றும் திருத்தங்கள் எதனையும் அக்காலப்பகுதியில் மேற்கொள்வதில்லை. எனவே, புதிய பாடத்திட்டத்தின் பயனுள்ள காலப்பகுதியில் பொருளாதார நன்மைகள் பல்கலைக்கழகத்திற்கு வரும் என்ற அடிப்படையில் மூலதன செலவில் ஏற்படும் செலவினங்கள் ஐந்தாண்டு காலத்திற்குள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவ கற்கைகள் பீடம் மற்றும் புவியியல் பீடம் ஆகியன 2015 ஆம் ஆண்டு முதல் மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தினை அமுல்படுத்தியதினால், அதில் ஏற்பட்ட செலவுகள் 2015 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது செலவிடப்பட்டன. அத்தோடு விவசாய விஞ்ஞானங்கள் பீடமும், பிரயோக விஞ்ஞான பீடமும் 2016 ஆம் ஆண்டு முதல் மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தினை அமுல்படுத்தியதினால், அதில் ஏற்பட்ட செலவுகள் 2016 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது செலவிடப்பட்டன.

### 1.2.4. அறிவு மேம்படுத்தல்

ஊழியர்களின் அறிவு மேம்படுத்தலுக்கான செலவினமானது மூலதனச் செலவினமாகக் கருதப்படுகின்றது, மேலும் அது 05 ஆண்டு காலத்திற்கு மேல் மாற்றியமைக்கப்படுகின்றது.

### 1.2.5. கால்நடை

கால்நடை மறுமதிப்பீடு மற்றும் மறுமதிப்பீட்டு உபரி / பற்றாக்குறை நிதி செயற்திறன் அறிக்கையில் விதிக்கப்பட்டுள்ளது.

### 1.2.6. சரக்கிருப்பு

சரக்கிருப்புகள் குறைந்த செலவில் மற்றும் நிகர மதிப்பில் குறிப்பிடப்படுகின்றன. பொதுவாக, செலவு முதல் வந்து முதல் செல்லும் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு, சரக்குகள் கொள்வனவு செய்வதில் செலவு செய்யப்படும் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை மற்றும் அமைவிடம் ஆகியவற்றைக் கொண்டுவரும் செலவினையும் கொண்டுள்ளது.

**1.2.7. வரவுகள்**

வரவுகள் அவைகள் உணர மதிப்பிடப்பட்டுள்ள அளவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**1.2.8. பல்கலைக்கழக ஆராய்ச்சி மானியம்**

SLPSAS 20 இன் பிரகாரம், ஒரு உள்வாரித் திட்டத்தின் ஆராய்ச்சிக் கட்டத்திலிருந்து எழும் எந்தவிதமான மறைமுகமான சொத்துக்களும் அங்கீகரிக்கப்படமாட்டாது. ஆராய்ச்சிக் கட்ட நடவடிக்கைகள் மீதான செலவினமானது அது ஏற்படும் போது மாத்திரமே செலவில் அங்கீகரிக்கப்படும். ஒரு உள்வாரித் திட்டத்தின் வளர்ச்சிக் கட்டத்திலிருந்து உருவான ஒரு அருமையான சொத்து, அங்கீகார அளவுகோலை வெளிப்படுத்த முடியுமானால் மாத்திரமே அங்கீகரிக்கப்படும். இந்தத் தீர்க்கதரிசனமானது தற்போதைய நிதியாண்டிலிருந்து முன்னோக்குடன் நிறைவேற்றப்பட்டு எதிர்காலத்தில் தொடரலாம் என நம்பப்படுகின்றது.

பல்கலைக்கழகமானது வருடாந்த மூலதன வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அதிகரிக்க நிதியை ஒதுக்கியுள்ளது. ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்ட மொத்த நிதி, நிதிச் செயற்திறன் அறிக்கையில் செலவாகக் காட்டப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டின் போது செலவினமாக அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சிச் செலவினத்தின் தொகை ரூபா. 5,611,980.00. ஆயினும் 2015 ஆம் ஆண்டிற்கான ஆய்வுக் கட்ட நடவடிக்கைகளுக்கான செலவினம் மற்றும் ஒரு சொத்து எனக் கருதப்பட்ட தொகை ரூபா. 555,745.00. அவைகள் SLPSAS 20 இன் ஏற்றுக் கொள்ளலின் மூலம் தற்சமயம் நடப்பு நிதியாண்டில் 2015 ஆம் ஆண்டிற்கான செலவினம், சரி செய்யப்பட்ட உபரி மற்றும் பற்றாக்குறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**1.2.9. பணம் அல்லது பணத்திற்கு இணையானவைகள்**

பணம் அல்லது பணத்திற்கு இணையானவைகள் வங்கிகளில் பண வைப்புகளாக உள்ளன.

**1.3. பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்**

ஐந்தொகைத் தேதியில் அனைத்து பொறுப்புகளும் நிதி அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. மற்றும் பொறுப்புகள் வெளியேறுவதாக அறியப்பட்ட போதுமான விதிகள் கடப்பாடுகளுக்காக செய்யப்படுகின்றன. ஆனால் இதன் அளவு துல்லியமாக தீர்மானிக்க முடியாது.

தேவைகள் செலுத்தப்பட்ட பொறுப்புகள் அல்லது ஐந்தொகையில் தற்போதைய பொறுப்புக்கள் ஓராண்டுக்குள் ஐந்தொகையில் தற்போதைய பொறுப்புகளாகக் கருதப்படுகின்றன.

ஐந்தொகைத் தேதியிலிருந்து ஒரு வருடம் கழித்து செலுத்தப்பட்ட பொறுப்புகள் ஐந்தொகையில் தற்போதல்லாத பொறுப்பாக கருதப்படுகின்றன.

**1.3.1. ஊழியர் நலன்கள்**

(அ) **குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்**

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் ஒரு ஊழியர் ஓய்வூதியத்தில் பெறும் நன்மைகளின் அளவை மதிப்பிடுகின்றன.

**ஓய்வு பெறுவதற்கான பணிக்கொடை ஏற்பாடுகள்**

பல்கலைக்கழகமானது 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு நலத் திட்டத்தை பின்பற்றி தகுதியான அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கி வருகின்றது.

வரையறுத்த நன்மை வழங்கும் திட்டமானது ஒரு ஊழியர் ஓய்வுபெறும் காலத்திற்கேற்ப அல்லது சேவைக்காலம் மற்றும் இழப்பீடு போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளைக் கொண்டு பயன்பெறும் தொகை தீர்மானிக்கப்படுகின்றது.

*இந்தப் பொறுப்பினைத் நிறைவேற்றுவதற்காக, அறிக்கையிடல் தேதி, கணக்கிடப்படும் தொகை உள்வாரி மேலாண்மை மதிப்பீட்டு ஏற்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும். ஊழியர்களுக்கான வரையறுக் கப்பட்ட பயன் திட்டங்களுக்கு பொறுப்பான ஐந்தொகையில் பல்கலைக்கழக முறைமையில் ஐந்து ஆண்டு கால சேவையை நிறைவு செய்த ஊழியர்களுக்காக இந்தப் பொறுப்பு அங்கீகரிக்கப்படுகின்றது.*

*எந்தவொரு கொடுப்பனவுகளும் நிகர தொடக்கத்தில் வழங்கப்பட்ட முன்னுரிமைக்கு இடையிலான விளைவான வேறுபாடு மற்றும் காலாண்டின் இறுதிக்குள் முன்னெடுக்கப்படும் முன்னுரிமை இலாபம் மற்றும் இழப்பு அறிக்கையில் கையாளப்பட்டுள்ளது.*

*பணிக்கொடை ஏற்பாடுகள் வெளிவாரியாக நிதியளிக்கப்பட்டவை அல்லது செயல் மதிக்கப்பட்டவை அல்ல.*

(ஆ) **குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்**

*குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது ஒரு பிந்திய தொழில்வாய்ப்புத் திட்டமாகும். அது நிறுவனம் தனியான நிறுவனத்தின் மீது செலுத்துகின்ற ஒரு நிலையான பங்களிப்பாகும் என்பதோடு அதற்கு கூடுதல் தொகை செலுத்த சட்ட மற்றும் அல்லது ஆக்கபூர்வமான கடமைத் திட்டங்கள் எதுவுமில்லை.*

*பங்களிப்புக்கான கடப்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் விரிவான வருமான அறிக்கையில் அவை செலவினமாக இருத்தல் வேண்டும்.*

**பல்கலைக்கழக சேமலாப நிதி (UPF) மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதி**

*இலங்கை மற்றும் பல்கலைக்கழக சட்டத்திற்கும் இணங்க பல்கலைக்கழகம் மற்றும் பணியாளர்கள் முறையே 15% அல்லது 7% மற்றும் 10% இனை ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்திலிருந்து பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்படுகின்றது.*

*மேலும், பல்கலைக்கழகமானது ஒவ்வொரு ஊழியர் சார்பாகவும் 8% இனை பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.*

**ஊழியர் நம்பிக்கை நிதியம்** (ETF)

*பல்கலைக்கழகமானது ஒவ்வொரு ஊழியர் சம்பளத்திலும் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.*

*1.3.2.* **குத்தகைகள்**

**நிதிக் குத்தகைகள்**

*ஒரு குத்தகை அது கனிசமான எல்லா அபாயங்களையும் மற்றும் உரிமையுடனான வெகுமதிகளையும் இடமாற்றப்பட்டால் அது நிதிக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.*

**தொடக்க அங்கீகாரம் மற்றும் தொடர்ச்சியான அளவீடு**

*ஆரம்பத்தில், நிதிக் குத்தகை மற்றும் நிதிக் குத்தகைக் கடன்களின் கீழ் இருந்த சொத்துக்கள் அவற்றின் குறைந்த பட்ச குத்தகை அடிப்படையில் நிதி நிலை அறிக்கையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என அங்கீகரிக்கப்பட்டன.*

*நிதி வசூலிக்கும் மற்றும் சிறந்த வட்டி முறையைப் பயன்படுத்தி நிலுவையிலுள்ள கடன்களைக் குறைத்து பின்னர் தொடர்ச்சியான குத்தகைக் கொடுப்பனவுகள் ஒதுக்கப்படுகின்றன.*

**1.3.3. மானியங்களுக்கான கணக்கு**

செலவினங்களை அங்கீகரிக்கும் அதே காலப்பகுதியில் வருமான அறிக்கையில் வருவாய் பெறும் செலவினங்களுக்கு பல்கலைக்கழகத்தை ஈடு செய்யும் மானியங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ஒரு சொத்தின் செலவினத்திற்கான பல்கலைக்கழகத்தை ஈடு செய்யும் மானியங்கள், வருமான அறிக்கையில் தொடர்புடைய சொத்தின் பயனுள்ள வாழ்க்கையின் அடிப்படையில் ஒரு முறையான அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை பொதுத்துறை கணக்குப் பதிவியியல் தரநிலையின்படி 20 ரூபா பெறுமதியான மூலதன மானியங்கள் மற்றும் நன்கொடைகளை அடையாளம் காணும் போது பல்கலைக்கழக வருவாய் அணுகுமுறை 2014.01.01 முதல் ஏற்றுக் கொண்டு எதிர்காலத்தில் தொடர நம்பப்படுகிறது.

**1.3.4. கட்டுப்பாட்டுப் பொறுப்பு**

கீழ்க்குறிப்பிடப்படும் அனைத்து நீதிமன்ற வழக்குகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதோடு நாங்கள் சட்டரீதியான கட்டணங்கள் செலுத்த வேண்டியுள்ளது. சில இழப்பீடுகள் தற்போது கணிக்க முடியாதுள்ளது. எனவே, வழக்குகளில் எழும் அபாயங்கள் குறித்து கணக்கில் எவ்விதமான விதிமுறைகளும் இல்லை ஐந்தொகை தேதிக்கு முந்தைய வழக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**மாவட்ட நீதிமன்றம்**

| | |
|---|---|
| 3917 / M | M.D.L.D.K. Yatawara, |
| 3918 / M | M.D.L.D.K. Yatawara, |
| 3401 / M | Polytech janitorial service (L.A.K.Dihani Silva) |
| 4248 / M | W.M. Deepika Priyadarshani |
| 3947 / M | A. Anuradha Rodrigo |
| 3121 / M | D.B.G. Jayathissa |
| 3299 / M | A.M.P.M. Kurunarathna |
| 3555 / M | D.M. Rathnayake |
| 4708-especial | A. Mahinda Methsiri |

**உச்ச நீதிமன்றம்**

| | |
|---|---|
| 13/2015(FR) | D.T. Wickramarathne |
| 267/2014 (F/R) | B.M.D.G.A.D. Bandara Aberathne |
| 09/15(FR) | R.H.A.S.S. Karunarathne |
| HCCA LA 344/16 | M. Wimaladasa De Silva |

**மேன்முறையீட்டு நீதிமன்றம்**

| | |
|---|---|
| CA WRIT Appilication No.1047/2008 | T.M.S.L. Priyadharshaka |
| Civil Appeal | |
| CA 66/2015 | M. Wimaladasa De Silva |

**உயர் நீதிமன்றம்**

| | |
|---|---|
| 37/2012-LTA | G. Anura Bandara |
| 38/2012 – LTA | B.P. Gamini Anura |
| 35/2012-LTA | D.B.J. Wijerathne |
| 36/2012- LTA | K. Kithsiri Dayananda |
| 34/2012 - LTA | Upali Amarasena Ranathunga |
| HC/ARB/95/2014 | Design consultant |
| HC/ARB 207/2013 | Design consultant |

மனித உரிமைகள் ஆணையம்

| | |
|---|---|
| HRC/642/15 | H.M.G.P. Gunathilaka |
| HRC/3598/15 | K.W.S. Thilakarathne |
| HRC/2958/2015 | W.P. Elvitigala |
| IR/COM/05/H/2015/30 | P.B. Presad |
| PTD/227/G/2014 | R.A. Udaya Kumara |
| 11643/TP | R.A.Udaya Kumara |
| BC1489/2014/b-25 | M.L.K.M. Dissanayaka |
| HRC/3562/15/L-6 | M.M. Wimalasiri & M.M. Indeera |
| HRC/2218/16/1-23 | P.S.N. Samarathunga |
| HRC/751/16(CP/LRR/HR/59) | L. Guruge |

**நீதவான் நீதிமன்றம்**

| | |
|---|---|
| 51445/12 | சில மாணவர்களுக்கெதிராக பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு |
| 54123 | பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு |

மத்தியஸ்தம்

| | |
|---|---|
| ICLP Ref. No.238(i) | Design Consultant ICLP Arbitration Centre. |

தொழில் நீதிமன்றம்

| | |
|---|---|
| 40/412/2013-LTB | M.L.M.K. Dissanayake |
| 40/255/2009-LTB | S.K. Hemakkody |

1.4. **வருமான அறிக்கை**

1.4.1. வருவாய் அங்கீகாரம்

வருவாய் ஆதார அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(அ) வட்டி வருமானம் அங்கீகார அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மானியங்களிலிருந்து பெறப்பட்ட வருவாய்கள் அவைகள் பெற்றுக் கொண்ட காலத்தில் அங்கீகரிக் கப்பட்டுள்ளன.

(இ) அனுசரணைகள் தொடர்பான நடவடிக்கைகள் பற்றுச்சீட்டாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

(ஈ) பிற வருமானம் அங்கீகார அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(உ) அரச மானியங்கள் : இலங்கை அரசாங்கத்தின் பொது திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மானியங்கள் மற்றும் மீண்டெழும் செலவுகள் இடம்பெறும். அடுத்த காலகட்டத்தில் செலவிடப்படும் சொத்துக்களை வாங்குவதற்கு அரச மானியங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆண்டுக்கு பெறப்பட்ட மொத்த மூலதன மானியங்கள் ரூபா. 1,323,396,600 ஆனது பின்வருமாறு பயன்படுத்தப்பட்டது.

| | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|
| மீண்டெழும் செலவுகளுக்கான அரச நிதி | 1,018,900,000 | 891,508,158 |
| மஹபொல புலமைப்பரிசுலுக்கான அரச நிதி | 57,906,800 | 59,044,750 |
| சகாய நிதியத்திற்கான அரச நிதி | 51,589,800 | 29,953,800 |
| புணரமைப்பிற்கான மூலதன மானியம் | 60,000,000 | 25,000,000 |
| சாதனங்கள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளுக்கான மூலதன மானியம் | 90,000,000 | 82,000,000 |
| கட்டுமானங்களுக்கான மூலதன மானியம் | 40,000,000 | 50,000,000 |
| அறிவு மேம்படுத்தல் மற்றும் நிறுவன அபிவிருத்தி | 5,000,000 | 10,300,000 |
| **மொத்தம்** | **1,323,396,600** | **1,147,806,708** |

1.4.2. செலவு

பல்கலைக்கழகத்தை பராமரிப்பதில் ஏற்படும் அனைத்து செலவினங்களும் அங்கீகார அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு செலவினங்களுக்கான வருவாயை உறுதிப்படுத்துவதில் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

1.5. **ஒப்பீட்டுத் தகவல்**

ஒப்பீட்டு புள்ளிவிபரங்கள் தற்போதைய வருடாந்த விளக்கக்காட்சிக்கான தேவைக்கு ஏற்ப தேவைப்படும்போது மறுசீரமைக்கப்பட்டன.

1.6. **நிதிப்பாய்ச்சல் கூற்று**

நிதிப்பாய்ச்சல கூற்று மறைமுக முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

1.7. **ஒப்பீட்டுத் தகவல்**

SLIPSAS 3 அடிப்படையாகக் கொண்ட பொது கையிருப்பு கணக்கிற்கு பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

பின்வரும் தொகைகள் பற்று வைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| a) | Rs. 167,300.00 | சரக்கிருப்பு |
| b) | Rs. 8,500.00 | வருமானம் |
| c) | Rs. 6,310.40 | பொழுதுபோக்குப் படிக் கொடுப்பனவு |
| d) | Rs. 13,422.77 | மேலதிக நேரப் பாக்கிகள் |
| e) | Rs. 27,060.00 | பிடித்து வைத்தல் தொகை மீளச் செலுத்தல் |
| f) | Rs. 38,380.00 | பிடித்து வைத்தல் தொகை மீளச் செலுத்தல் |
| g) | Rs. 31,500.00 | சட்ட வல்லுநருக்கான கொடுப்பனவு |
| h) | Rs. 52,500.00 | சட்ட வல்லுநருக்கான கொடுப்பனவு |
| i) | Rs. 77,700.00 | மீளச் செலுத்தல் |
| j) | Rs. 68,398.00 | ஆவணச் செலவுகள் |
| k) | Rs.225, 455.34 | HETC திட்டம் |
| l) | Rs. 319,599.58 | நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை |
| m) | Rs. 274.00 | ஆவணச் செலவுகள் |
| n) | Rs. 20,574.44 | பணியாள் கடன் |
| o) | Rs. 555,745.00 | பல்கலைக்கழக ஆய்வு மானியம் |
| p) | Rs. 1,096,713.51 | சர்வதேச ஆய்வரங்கு - 2015 |
| q) | Rs. 46,000.00 | தேய்மானம் - மோட்டார் வாகனங்கள் |
| r) | Rs. 162,454.00 | வருமான நன்கொடை வேறுபாடு |
| s) | Rs. 10,108,669.00 | CODL கணக்கு |
| t) | Rs. 534,541.13 | திட்ட முற்பணம் |
| u) | Rs. 184,015.20 | திரட்டிய தேய்மானம் - வேறு உபகரணங்கள். |

பின்வரும் தொகைகள் வரவு வைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| v) | Rs. 167,300.00 | பட்டமளிப்பு மேலங்கி |
| w) | Rs. 1,295.34 | வருமானம் |
| x) | Rs. 68,398.20 | ஆவணச் செலவுகள் |
| y) | Rs. 1,055,228.95 | Sandee ஆய்வு மானியம் |
| z) | Rs. 179,710.08 | ஆவணச் செலவுகள் |
| aa) | Rs. 1,908,200.00 | மகாபொல வருமானம் |
| bb) | Rs. 2,304,500.00 | சகாயநிதி வருமானம் |

| | | |
|---|---|---|
| cc) | Rs. 81,940.09 | மீண்டெழும் ஆவணச் செலவுகள் |
| dd) | Rs. 10,291,046.34 | மீண்டெழும் ஆவணச் செலவுகள் |
| ee) | Rs. 2,744,785.94 | மீண்டெழும் ஆவணச் செலவுகள் |
| ff) | Rs. 1,060,964.69 | மீண்டெழும் ஆவணச் செலவுகள் |
| gg) | Rs. 464,063.03 | மீண்டெழும் ஆவணச் செலவுகள் |
| hh) | Rs. 666.00 | ஆவணச் செலவுகள் |
| ii) | Rs. 300,223.50 | பணிக்கொடை மீதான ஏற்பாடுகள் |
| jj) | Rs. 162,454.00 | அலுவலக மற்றும் ஆசிரிய உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வு |
| kk) | Rs. 1,555,075.20 | தேய்பெறுமானத்தின் மேல் ஒதுக்கீடு - மோட்டார் வாகனங்கள் |
| ll) | Rs. 4,359,682.64 | ஆவணச் செலவுகளின் மேல் ஒதுக்கீடு |
| mm) | Rs. 509, 696.41 | ஆவணச் செலவுகளின் மேல் ஒதுக்கீடு |
| nn) | Rs. 521,574.00 | மருந்து சரக்கிருப்பு |
| oo) | Rs. 25,949.60 | வெளிநாட்டு மாணவர்களின் புலமைப்பரிசில் நிகழ்ச்சி |
| pp) | Rs. 1,871,603.20 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மானியம் |
| qq) | Rs. 567,885.28 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மானியம் |
| rr) | Rs. 160,000.00 | தொடக்க ஆய்வு மானியம் |
| ss) | Rs. 6,600.00 | கண்டுபிடிப்பு ஆய்வு மானியம் |
| tt) | Rs. 24,026.83 | வருடாந்த ஆய்வு முகாம் |

*1.8.* HETC **மானியம்**

HETC திட்டமானது உள்வாரி பட்டதாரி மாணவர்களினது தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் மென் திறன் ஆற்றல்கள் அதனோடு பட்டப்பின் படிப்பு மாணவர்களின் ஆய்வு மற்றும் அபிவிருத்தியினை அதிகரிப்பதற்காக நிதிகளை வழங்கியது.

2012 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் ஆகிய இரண்டிற்கும் HETC திட்டத்தினால் கிடைக்கப்பெற்ற நிதிப் பங்களிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. இந்தச் செலவுகள் நிதிக் கூற்றில் சேர்க்கப்படவில்லை.

| விபரங்கள் | ரூபா |
|---|---|
| பல்கலைக்கழக அபிவிருத்தி மானியம் | 22,435,284 |
| வெளிவாரி பட்ட நிகழ்ச்சி மானியம் | 10,028,688 |
| IDAS மானியம் | 18,234,913 |
| தர மேம்பாட்டு மானியம் | 36,141,404 |
| மனித வள அபிவிருத்தி மானியம் | 20,847,339 |
| **மொத்தம்** | **107,687,628** |

இவைகளுக்கப்பால், இத்திட்டத்தின் கீழ் ரூபா. 77,827,930 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டும், 2016.01.01 அன்று எழுதப்பட்ட மதிப்பை அடிப்படையாக வைத்து ரூபா. 20,078,188.81 உம், 2016 இல் ரூபா 66,638,815 உம் கல்வி சார் பணியாளர்களுக்கு கலாநிதிக் கற்கைகளுக்கு செலவிடப்பட்டது. இந்த சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு அந்தந்த மானியம் பல்கலைக்கழக கொள்கைகளின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

*1.9.* **உள்நிறுவனக் கணக்குகள்**

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்று தயாரிக்கும்போது ரூபா. 27,916,037.94 தொகையானது திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து பெறத்தக்கதாகவும் செலுத்தத்தக்கதாகவும் அமைக்கப்பட்டது.

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்.*

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் 2018, மாச்சு 28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின்போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் யாகல, பதுகலகொடவத்த, டிக்கும்புர, அஹங்கம என்ற முகவரியில் வசிக்கின்ற (இதனகத்துப் பின்னர் "கடன் பெற்றவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) லலிதா நுவன் வன்னியாரச்சி (தேசிய அடையாள அட்டை இல. 831880554 V) என்பவர் நிதி வசதிகளைப் பெற்றுக் கொண்டிருப்பதாலும், அத்தோடு தொண்ணூற்று ஒன்பது இலட்சம் ரூபா (ரூபா 99,00,000.00) தொகைக்காக சொல்லப்பட்ட கடன் பெற்றவர் பிரசித்த நொத்தாரிசு கீர்த்தி களுவாரச்சி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.11.02 ஆந் திகதியுடைய 4443 ஆம் இலக்கத்தையுடைய ஆரம்ப ஈட்டு முறியை நிறைவேற்றி, சொல்லப்பட்ட நிதி வசதிகளின் காரணமாக (இதனகத்துப் பின்னர் "யூனியன் வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) யூனியன் வங்கி கொழும்பு பீஎல்சீ (பதிவு இலக்கம் PB 676 PQ) நிறுவனத்துக்குச் செலுத்தவேண்டிய தொண்ணூற்று ஒன்பது இலட்சம் ரூபா (ரூபா 99,00.000.00) தொகை மற்றும் அதன் மீதான வட்டியையும் செலுத்துவதற்கு பிணைப்பொறுப்பாக இதன் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனத்தை ஈடுவைத்து அடைமானம் செய்திருக்கின்றார்

அத்தோடு 2018.01.21 ஆந் திகதியில் உள்ளவாறு, செல்லப்பட்ட நிதி வசதிகளின் மூலதன நிலுவை மீது அறுபத்து நான்கு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து ஆறு ரூபா அறுபத்தேழு சதம் (ரூபா 64,67,006.67) தொகையுடன் மற்றும் மேலதிக வட்டியுடன் சேர்த்து சொல்லப்பட்ட ஈடுவைத்தவரிடமிருந்து கீழே குறிப்பிடப்படுகின்றவாறு யூனியன் வங்கிக்கு வருமதியாகவும் சேர வேண்டியும் உள்ளது.

1. 2018.01.21 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவையாக இருக்கின்ற பதினாறு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து நூற்று ஐம்பத்தேழு ரூபா எண்பது சதம் (16,77,157.80) தொகையும் மற்றும் 2018.01.22 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை மூலதன நிலுவையான பதினைந்து இலட்சத்து அறுபதாயிரம் (ரூபா 15,60,000.00) தொகையின் மீது வருடத்துக்கு 19.5% சதவீத மேலதிக வட்டியும்.

2. மேலதிகப் பற்று வசதி மீது 2018.01.21 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவையாக இருக்கின்ற நாற்பத்தேழு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று நாற்பத்தெட்டு ரூபா எண்பத்தேழு சதம் (47,89,848.87) தொகையும் மற்றும் 2018.01.22 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை அதன் மீதான வருடத்துக்கு 28% சதவீத மேலதிக வட்டி.

யூனியன் வங்கிப் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும். சொல்லப்பட்ட கடன் பெற்றவர் மேற்குறித்த கடன் நிலுவைகள் அல்லது அதன் பாகத்தை கொடுத்துத் தீர்ப்பதில் தவணை தவறியுள்ளனர் எனத் திருப்திப்பட்டுள்ளதனாலும், சொல்லப்பட்ட நிதிவசதிகளின் காரணமாக 2018.01.21 ஆந் திகதியில் உள்ளவாறான சொல்லப்பட்ட ஈடுவைத்தவரிடமிருந்து யூனியன் வங்கிக்கு வருமதியானதும் மற்றும் சேர வேண்டியதுமான அறுபத்து நான்கு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து ஆறு ரூபா அறுபத்தேழு சதம் (ரூபா 64,67,006.67) ஆகிய தொகையையும், 2018.01.22 ஆந் திகதி தொடக்கம் விற்பனை திகதிவரை மேலே சொல்லப்பட்ட வீதங்களில் நிதிவசதிகளின் மீதான மேலதிக வருடாந்த வட்டியையும், சொல்லப்பட்ட ஈட்டு முறி இல. 4443 இன் நியதிகளின் கீழ் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரமும் யூனியன் வங்கிக்கு மீட்டுக்கொள்வதற்கு உரித்துடைய அனைத்து ஏனைய தொகைகளையும் மீட்டுக்கொள்வதற்காக அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட, மேலே சொல்லப்பட்ட 4443 ஆம் இலக்க ஈட்டு முறியின் கீழ் மற்றும் அதன் பயனால் யூனியன் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளராகிய த்ரிவங்க அன்ட் சேனாநாயக்க ஒக்ஷனியர்ஸ் நிறுவனத்திற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் மொரவக கோரளை, பிடபெத்தர பிரதேச சபை எல்லைகளுக்குள்ளும் பிடபெத்தர பிரதேச செயலக எல்லைகளுக்குள்ளும் மற்றும் ரம்புக்கன மேற்கு கிராம அலுவலர் பிரிவிலும் ரம்புக்கன என்ற இடத்தில் அமைந்துள்ள மோதரவிலஹேன என அழைக்கப்படுகின்ற காணியின் துண்டம் A இன் ஒன்றிணைக்

கப்பட்டதும் மற்றும் தொடர்ச்சியானதுமான துண்டம் 11 மற்றும் 12 ஆக உள்ள டீ. யூ. அபேகுணவர்த்தன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1994.02.21 ஆந் திகதியுடைய 994 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 1 இன் மீள் அளவீடாகவும் மற்றும் உபபாகமாகவும் பிரிக்கப்பட்டதுமான காணி மாத்தறை உரிமம் பெற்ற நில அளவையாளர் டீ. யூ. அபேகுணவர்த்தன அவர்களால் தயாரிக்கப்பட்ட 2012.09.09 ஆந் திகதியுடைய 4491 ஆம் இலக்க வரைபடத்தில் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 1A காணியின் மண் மற்றும் விவசாயங்கள் மற்றும் அதில் உள்ள அனைத்தையும் உள்ளடக்கி சொல்லப்பட்ட துண்டம் 1A பின்வருமாறு எல்லைகளைக் கொண்டது - வடக்கு மற்றும் வடகிழக்கு : அதே காணியின் பாகம்; தெற்கு : மொரவக நெலுவ பிரதான வீதிக்கான அணுகுவழி ; தென்மேற்கு : அதே காணியின் துண்டம் 1B மற்றும் மேற்கு : அதே காணியின் ஒரு பாகம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு ஐந்து ஏக்கர்கள் (05ஏ. 0றூ. 00பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு கொடபொல மாவட்ட காணிப்பதிவகத்தில் G159/297 இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மற்றும்

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் மொரவக கோரளை, பிடபெத்தர பிரதேச சபை எல்லைகளுக்குள்ளும் மற்றும் ரம்புக்கன மேற்கு கிராம அலுவலர் பிரிவிலும் ரம்புக்கன என்ற இடத்தில் அமைந்துள்ள மோதரவிலஹேன என அழைக்கப்படுகின்ற காணியின் துண்டம் A இன் ஒன்றிணைக்கப்பட்டதும் மற்றும் தொடர்ச்சியானதுமான துண்டம் 11 மற்றும் 12 ஆக உள்ள டீ.யூ. அபேகுணவர்த்தன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1994.02.21 ஆந் திகதியுடைய 994 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 1 இன் மீள் அளவீடாகவும் மற்றும் உபபாகமாகவும் பிரிக்கப்பட்டதுமான காணி மாத்தறை உரிமம் பெற்ற நில அளவையாளர் டீ. யூ. அபேகுணவர்த்தன அவர்களால் தயாரிக்கப்பட்ட 2012.09.09 ஆந் திகதியுடைய 4491 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 1B காணியின் மண் மற்றும் விவசாயங்கள் மற்றும் அதில் உள்ள அனைத்தையும் உள்ளடக்கி சொல்லப்பட்ட துண்டம் 1B பின்வருமாறு எல்லைகளைக் கொண்டது - வடக்கு : அதே காணியின் பாகம்; கிழக்கு : அதே காணியின் துண்டம் 1A; தெற்கு : மொரவக நெலுவ பிரதான வீதிக்கான அணுகுவழி; தென்மேற்கு : மொரவக நெலுவ பிரதான வீதிக்கான அணுகுவழி ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு இரண்டு ஏக்கர்கள், இரண்டு றூட்கள் மற்றும் இருபத்தி நான்கு பர்ச்கள் (02ஏ. 02றூ. 24பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு கொடபொல மாவட்ட காணிப்பதிவகத்தில் G196/121 இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இனோகா ஜயவர்தன,
பணிப்பாளர் சபையின் செயலாளர்

6-539

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

நொச்சியாகம, ரலபனாவ குடியிருப்பு இல. 102ஐச் சேர்ந்த திரு.ஹீன்கெந்த முதலிகே விக்ரமபால மற்றும் திரு. ஹீன்கெந்த முதலிகே இந்திக சனத் விக்ரமபால ஆகியோரின் கடன் பொறுப்புகளுக்காக நொச்சியாகம, ரலபனாவ குடியிருப்பு, இல. 102 இல் அமைந்த ஈடுவைத்த ஆதனம்.

20.02.2018 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"1.பிரசித்த நொத்தாரிசு D. U. மனோதர அத்தாட்சிப் படுத்திய 20.09.2013 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1103 மற்றும் 09.06.2016 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1924 ஆகியவற்றின் பேரில் திரு. ஹீன்கெந்த முதலிகே விக்ரமபால மற்றும் திரு. ஹீன்கெந்த முதலிகே இந்திக சனத் விக்ரமபால ஆகியோரிடமிருந்து மேலதிகப்பற்று மீது முதலும் 18.01.2018 வரை வட்டியும் இருபத்திரண்டு இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்றி ஐம்பத்திரெண்டு ரூபா நாற்பத்தைந்து சதங்களும் (ரூபா 22,03,752.45) அத்துடன் இருபது இலட்சம் ரூபா (ரூபா 20,00,000.00) மீது ஆண்டுக்கு பதினாறு தசம் ஐந்து (16.5%) வீதத்தில் 19.01.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுக் திகதி வரை மேலும் வட்டியும், கடன் மீது முதலும் 18.01.2018 வரை வட்டியும் முப்பத்துநான்கு இலட்சத்து இருபத்து மூன்று ஆயிரத்து நூற்றி ஐம்பத்தைந்து ரூபா பதின்நான்கு சதங்களும் (ரூபா 34,23,155.14) அத்துடன் முப்பத்தொரு இலட்சத்து எழுபத்தைந்து ஆயிரம் (ரூபா 31,75,000.00) ரூபாவில் ஆண்டுக்கு பன்னிரெண்டு தசம் ஒன்று ஒன்பது (12.19%) வீதத்தில் 19.01.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருக்கிகு வருமதியாக உள்ளதாலும்;

2. மேற்குறிப்பிட்ட 20.09.2013 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1103 மற்றும் 09.06.2016 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1924 ஆகியவற்றின் பேரில் மேலதிகப்பற்று மீது இருபத்திரண்டு இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்றி ஐம்பத்திரெண்டு ரூபா நாற்பத்தைந்து சதங்களும் (ரூபா 22,03,752.45) கடன் மீது முப்பத்துநான்கு இலட்சத்து இருபத்து மூன்று ஆயிரத்து நூற்றி ஐம்பத்தைந்து ரூபா பதின்நான்கு சதங்களும் (ரூபா 34,23,155.14) அத்துடன் 19.01.2018 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு

ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 290, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05 என்னும் முகவரினைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் & சமரவிக்ரம ஏலதாரர் நிறுவனத்தின் ஏலதாரருக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, நொச்சியாகம கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.”.

### முதலாவது அட்டவணை

வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், நொச்சியாகம பிரதேச செயலாளரின் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் விலாச்சியா கோரளை தெற்கில் 339 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் மீகஹவெவ கிராமத்தில் அமைந்த “ஸ்டேற் லாண்ட” என அழைக்கப்படும் காணி அளவையாளர் நாயகம் அதிகாரமளித்த F.C.P150/1 இல் விபரித்த துண்டு 19 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : துண்டு இல. 18 உம்; கிழக்கு: F.C.P151 உம்; தெற்கு: துண்டு இல. 20 உம்; மேற்கு : துண்டு இல. 69 உம் எல்லைகளாகக் கொண்டு சைபர் தசம் ஒன்று ஒன்பது எழு ஹெக்டெயர்கள் (ஹெக்டயர் 0.197) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது அநுராதபுர மாவட்ட காணிப்பதிவகத்தில் L.D.O.M/9/30 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.M.B. ரத்னசிறி தயாரித்த 07.07.2013 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபட இல. 6041 இன் படி மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு மீகஹவெவ கிராமத்தில் அமைந்த “கொட இடம” என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.M.B. ரத்னசிறி தயாரித்த 07.07.2013 ஆந் திகதியிட்ட வரைபட இல. 6041 இல் விபரித்த துண்டு இல. 1 என அடையாளமிட்ட காணித்துண்டு - வடக்கு : F.C.P.A150 இல் துண்டு இல.18 உம்; கிழக்கு : F.C.P.A 151 உம் (நீர் வழி பாதுகாப்பு) ; தெற்கு : F.C.P.A 150 இல் துண்டு இல. 20 உம்; மேற்கு: F.C.P.A இல் துண்டு இல. 69 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் முப்பத்தேழு தசம் ஒன்பது பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 37.9பே.) அல்லது ஹெக்டெயர்கள் சைபர் தசம் ஒன்று ஒன்பது எழு சைபர் (ஹெக்டெயர்கள் 0.1970) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

இலங்கை மகாவெலி அதிகார சபை குடியிருப்பு செயற்திட்ட முகாமையாளர் தனது 10.07.2013 ஆந் திகதியிட்ட தொடர்பு இல. RPM/T/L/LOAN/NO/04 மற்றும் 11.02.2016 ஆந் திகதியிட்ட தனது தொடர்பு இல. RPM/T/L/NOG/LDO/5-2-1 ஆகிய கடிதத்தின் கீழ் காணியை வங்கிக்கு ஈடுவைக்க முன் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

ஒதுக்கங்கங்கள்

1. காணியுள் அல்லது அதன் மேல் காணப்படும் சகல கனிப்பொருள்களதும் உரிமையும், (இதற்கு இவ்வழங்கலின்போது பெறுமதி வாய்ந்த கற்களும் அடங்கும்) அவற்றை அகழ்வதற்கு, தேடுவதற்கு, வேலைசெய்வதற்கு மற்றும் அத்தகைய கனிப்பொருள்களை வெளியே கொண்டு செல்வதற்கான உரிமை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. காணிக்கான உரிமையாளர் என்ற முறையில் உடைமையானது இவ் வழங்கல் திகதிக்கு தற்சமயம் காணி மீது காணப்படும் வழி உரிமை அல்லது காணி மீது காணப்படும் ஏனைய உழைப்புகளும் ஆகும்.

**நிபந்தனைகள்**

01. உரிமையாளர் குறித்த உப பிரிவின் விஸ்தீரணத்தில் மேட்டுநிலம் 0.101 ஹெக்டெயர்கள்/ ஏக்கர்கள்------ ஹெக்டெயர்கள்/ ஏக்கர்கள் நீர்பபாசனக்காணி அலகு அல்லாது காணப்படும் பிரிக்கப்பட்டதொரு பாகத்தை விற்பனை செய்யலாகாது.

02. இங்கு குறித்த குறிப்பாக ------- ஆகக்குறைந்த பாகம் தவிர்ந்த வைத்திருக்கும் பிரிக்கப்படாத பங்கை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.

03. நிபந்தனை 1 இல் குறிப்பிட்ட உப பிரிவின் அலகு தவிர்ந்த விஸ்தீரணத்தில் வைத்திருக்கும் பிரிக்கப்பட்ட குறைந்த பாகத்துக்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.

04. நிபந்தனை 2 இல் குறிப்பிட்ட ஆகக்குறைந்த பகுதி தவிர்ந்த வைத்திருப்பவைகளின் பிரிக்கப்படாத பங்குக்கு ஒருவரும் உரிமையாளராக முடியாது.

05. வைத்திருப்பவை அல்லது நீர்ப்பாசன வசதியளிக்கக்கூடிய எவையேனும் பகுதி அல்லது இதன் பின்பு நீர்ப்பாசன கட்டளைச்சட்டத்தின் முன் ஏற்பாடுகளின் (அத்தியாயம் 453) கீழ் மற்றும் அதன் கீழான எவையேனும் விதிகளுடன் நீர்ப்பாசன பிரதேசம் தொடர்பில் நிர்மாண வேலையில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட எவையேனும் நீர்ப்பாசன வேலை அல்லது இதன்பின்பு நிர்மாணிக்கப்படுபவை தொடர்பில் உரிமையாளர் இணங்க வேண்டும்.

06. அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார சபையிடமிருந்து எழுத்தில் அனுமதி பெற்றால் அன்றி எந்தவொரு கனிப்பொருளை தேடவோ, அகழ்வதற்கோ, அல்லது காணியை விற்பதற்கோ உரிமையாளருக்கு முடியாது.

07. பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இன்றி இதன் எந்தவொரு பகுதியையும் வைத்திருக்க ஏற்பாடு இல்லை.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

S. M. P. R. சேமசிங்ஹ,
முகாமையாளர்,
நொச்சியாகம.

இலங்கை வங்கி,
நொச்சியாகம,
2018, ஏப்பிறல் 27.

6-557

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2018.02.20 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"1. பிரசித்த நொத்தாரிசு D. கித்துல்கொட அத்தாட்சிப் படுத்திய 12.12.2011 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3165 மற்றும் 16.02.2012 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3281, பிரசித்த நொத்தாரிசு D. வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 11.01.2013 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2090 மற்றும் 04.06.2014 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2549, பிரசித்த நொத்தாரிசு S. T. பெரேரா அத்தாட்சிப்படுத்திய 24.04.2017 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1686 மற்றும் பிரசித்த நொத்தாரிசு D. கித்துல்கொட அத்தாட்சிப்படுத்திய 10.02.2011 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2573 ஆகியவற்றின் பேரில், பாணந்துறை, வேகட, ஹொரணை வீதி. இல. 155 தற்போது பாணந்துறை, வேகட, ஹொரணை வீதி, இல. 155 ஐச் சேர்ந்த திருவாளர்கள் தினாலி பேகர்ஸ் மற்றும் பேஸ்ட்ரி ஷொப் (பங்காளர்கள் : பாணந்துறை, பிரதான வீதி, இல. 206 தற்சமயம் பாணந்துறை, வேகட, ஹொரணை வீதி, இல. 155 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மாஷல ஹேவகே சமந்த பிரசாத் மற்றும் திருமதி பத்திரகே தோனா பிரியங்கிகா பீரிஸ்) ஆகியோரிடமிருந்து மீள் அட்டவணைக்கடன் A மீது முதலும் 18.04.2018 ஆந் திகதி வரை வட்டியும் மூன்று கோடியே இருபத்தாறு இலட்சத்து முப்பத்தெட்டு ஆயிரத்து ஐநூற்று ஐம்பத்திரெண்டு ரூபா எழுபத்தி நான்கு சதங்களும் (ரூபா 3,26,38,552.74) அத்துடன் இரண்டு கோடியே எண்பத்தெட்டு இலட்சத்து நாற்பதாயிரத்து நாநூற்று ஒன்பது ரூபா எண்பத்தாறு சதங்களில் (ரூபா 2,88,40,409.86) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 19.04.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் மீள் அட்டவணைக்கடன் B மீது முதலும் 18.04.2018 வரை வட்டியும் அறுபத்தெட்டு இலட்சத்து நான்கு ஆயிரத்து எண்பத்தொன்பது ரூபா இருபத்தேழு சதங்களும் (ரூபா 68,04,089.27) அத்துடன் அறுபத்தாறு இலட்சத்து இருபத்தொன்பது ஆயிரத்து ஐநூற்று எழுபத்தாறு ரூபா பதினேழு சதங்களில் (ரூபா 66,29,576.17) ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 19.04.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் தவணைக்கடன் மீது முதலும் 18.04.2018 ஆந் திகதி வரை வட்டியும் ஒரு கோடியே அறுபத்தேழு இலட்சத்து எண்பத்தெட்டு ஆயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு ரூபா எழுபத்து மூன்று சதங்களும் (ரூபா 1,67,88,764.73) அத்துடன் ஒரு கோடியே அத்துடன் ஒரு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து தொண்ணூற்று நான்கு ஆயிரத்து முப்பத்திரெண்டு ரூபா அறுபத்தாறு சதங்களில் (ரூபா 1,47,94,032.66) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 19.04.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாதலாலும்;

2. மேற்குறிப்பிட்ட 12.12.2011 திகதியிட்ட முறி இல. 3165, 16.02.2012 ஆந் திகதியிட்ட 3281, 11.01.2013 திகதியிட்ட 2090, 24.04.2017 ஆந் திகதியிட்ட 1686, 04.06.2014 ஆந் திகதியிட்ட 2549 மற்றும் 10.02.2011 ஆந் திகதியிட்ட 2573 ஆகியவற்றின பேரில் மீள் அட்டவணைக்கடன் A மீது மூன்று கோடியே இருபத்தாறு இலட்சத்து முப்பத்தெட்டு ஆயிரத்து ஐநூற்று ஐம்பத்திரெண்டு ரூபா எழுபத்தி நான்கு சதங்களும் (ரூபா 3,26,38,552.74) மீள் அட்டவணைக்கடன் B மீது அறுபத்தெட்டு இலட்சத்து நான்கு ஆயிரத்து எண்பத்தொன்பது ரூபா இருபத்தேழு சதங்களும் (ரூபா 68,04,089.27) தவணைக்கடன் மீது ஒரு கோடியே அறுபத்தேழு இலட்சத்து எண்பத்தெட்டு ஆயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு ரூபா எழுபத்து மூன்று சதங்களும் (ரூபா 1,67,88,764.73) அத்துடன் 19.04.2018 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T & H ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பாணந்துறை மேற்தரக்கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனை பாணந்துறை தல்பிட்டி தெபத்தயில் வேகட 687ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பாணந்துறை பட்டினசபை எல்லைகளில் வேகடயில் அமைந்த "புளுகஹவத்த சென்கொண்டயா கெடகேலகஹவத்த மற்றும் கஹட்டகஹவத்த அல்லது கெடகேலகஹவத்த" என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் P. அஜித் P தி சில்வா தயாரித்த 2011, யூலை 03 ஆந் திகதியிட்ட வரைபட இல. 317 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : வரைபட இல. 4002 இல், துண்டு A இன் மீதிப்பாகமும்; கிழக்கு : வரைபட இல. 4002 இல் அதே காணியின் துண்டு B உம், துண்டு 2 உம்; தெற்கு : துண்டு 2 உம் பெருந்தெருவும்; மேற்கு : வரைபட இல. 3110 இல் அதே காணியின் துண்டு 4 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 317 இன்படி பதினாறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 16பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது பாணந்துறை காணிப் பதிவகத்தில் D 04/132 இல் பதிவு செய்யப்பட்டது.

### முதலாவது அட்டவணை

மேல்மாகாணம் களுத்துறை மாவட்டம் பாணந்துறை தொட்டமுனை பாணந்துறை தல்பிட்டி தெபத்தயில் மலமுல்ல மேற்கு (684 A) ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவு மற்றும் பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பாணந்துறை பிரதேசபை எல்லைகளுள் (தந்திரிமுல்ல உப அலுவலகம்) மலமுல்ல கிராமத்தில் அமைந்த "கொடபொரகஹவத்த" (கொடபொரகஹவத்த கட்டிய என பதிவுசெய்த) என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் J. N. விக்ரமாரத்ன தயாரித்த 2002 மே 01 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1039 இல் விபரித்த துண்டு 22 A1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு: பாணந்துறையிலிருந்து வீடுகள் வரை பாதையும்; கிழக்கு : 2002, மே 01 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1039 இல் துண்டு 22A3 (பிரவேசப் பாதையும்); தெற்கு : 2002.05.01 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1039 இல் துண்டு 22A 2 உம்; மேற்கு : Y. B. K. கொஸ்தா தயாரித்த 2001.10.27 ஆந் திகதியிட்ட வரைபட இல. 3257 இல் துண்டு 22 இன் மீதிப்பாகமும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1039 இன்படி பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் D 328/24 இல் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட மலமுல்ல கிராமத்தில் அமைந்த "கொடபொரகஹவத்த" (கொடபொரகஹவத்த கட்டிய என பதிவுசெய்த) என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1039 இல் விபரித்த துண்டு 22 A 3 (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : பாணந்துறையிலிருந்து வீடுகள் வரை பாதையும்; கிழக்கு : வரைபட இல. 1039ல் துண்டு 22 A4 மற்றும் 22A5 உம்; தெற்கு : வரைபட இல. 1039 இல் துண்டு 22A6 உம்; மேற்கு : வரைபட இல. 1039 இல் துண்டு 22 A2 மற்றும் 22 A1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1039 இன்படி மூன்று தசம் ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 3.6பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் D07/51ல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

திருமதி L. K. கமகே,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பாணந்துறை மேற்தரக்கிளை.

6-559

---

## கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்.*

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் 2018, மாச்சு 28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின்போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் "சந்தோசம் பார்ம்" என்ற பெயர், பாணி மற்றும் நிறுவனம் என்பவற்றின் கீழ் ஒரு தனியுடைமை வியாபாரத்தை நடாத்துகின்ற, இல. 316/A, புனித அந்தோணியார் மாவத்தை, தொடுவாவ என்ற முகவரியில் வசிக்கின்ற (இதனகத்துப் பின்னர் "கடன் பெற்றவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) சாகர நிலந்த வாய் டேனியல் எனவும் சாகர நிலந்த வாய்டேனியல் எனவும் அழைக்கப்படுகின்ற (தேசிய அடையாள அட்டை இல. 843441831V) என்பவர் நிதி வசதியைப் பெற்றுக் கொண்டிருப்பதாலும், சொல்லப்பட்ட கடன் பெற்றவர் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு W. S. N. திசேரா அவர்களால் சகலதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இதன் 1 ஆவது அட்டவணையின் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனத்தின் மீது 2014.08.01 ஆந் திகதியுடைய 1756 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறியையும், 2014.09.04 ஆந் திகதியுடைய 1834 ஆம் இலக்க இரண்டாம் தர ஈட்டு முறியையும், 2015.07.29 ஆந் திகதியுடைய 2217ஆம் இலக்க மூன்றாம் தர ஈட்டுமுறியையும்,

2 ஆவது அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனத்தின் மீது 2014.08.01 ஆந் திகதியுடைய 1759 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறியையும், 2014.09.04 ஆந் திகதியுடைய 1836 ஆம் இலக்க இரண்டாம் தர ஈட்டு முறியும், 2015.07.29 ஆந் திகதியுடைய 2221ஆம் இலக்க மூன்றாம் தர ஈட்டுமுறியையும், 3 ஆவது அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனத்தின் மீது 2014.09.04 ஆந் திகதியுடைய 1832ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறியையும், 2015.07.29 ஆந் திகதியுடைய 2225ஆம் இலக்க இரண்டாம் தர ஈட்டு முறியையும், 2016.10.07 ஆந் திகதியுடைய 2689 ஆம் இலக்க மூன்றாம் தர ஈட்டுமுறியையும், 4 ஆவது அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனத்தின் மீது 2014.01.27 ஆந் திகதியுடைய 1548 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறியையும், 2014.10.24 ஆந் திகதியுடைய 1891ஆம் இலக்க இரண்டாம் தர ஈட்டு முறியும், 2015.07.29 ஆந் திகதியுடைய 2219ஆம் இலக்க மூன்றாம் தர ஈட்டுமுறியையும், முறையே நிறைவேற்றியிருப்பதாலும், (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) யூனியன் வங்கி கொழும்பு பீஎல்சீ (பதிவு இலக்கம் PB 676 PQ) நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய சொல்லப்பட்ட நிதி வசதிகளை யூனியன் வங்கிக்குச் சேரவேண்டிய ரூபா மூன்று கோடி (ரூபா 3,00,00,000.00) தொகையையும் வட்டியுடன் சேர்த்து கொடுப்பனவு செய்வதற்கான பிணைப்பொறுப்பாக சொல்லப்பட்ட அட்டவணைகளில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனங்களை சொல்லப்பட்ட கடன் பெற்றவர் அடைமானம் செய்து ஈடு வைத்திருக்கின்றார்.

அத்தோடு 2018.02.05 ஆந் திகதியில் உள்ளவாறான சொல்லப்பட்ட கடன் வசதியின் மீது மூன்று கோடியே பதினைந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று அறுபத்தேழு ரூபா பதினொரு சதம் (ரூபா 3,15,50,767.11) மற்றும் சொல்லப்பட்ட மூலதன நிலுவை மூன்று கோடி (ரூபா 3,00,00,000.00) தொகை மீது 2018.02.06 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை 18.50% சதவீத மேலதிக வருடாந்த வட்டியுடன் சேர்த்து சொல்லப்பட்ட ஈடுவைத்தவரிடமிருந்து யூனியன் வங்கிக்கு வருமதியாக உள்ளது. யூனியன் வங்கிப் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட கடன் பெற்றவர் மேற்குறித்த கடன் நிலுவையை அல்லது அதன் ஒரு பகுதியை கொடுத்துத் தீர்ப்பதில் தவணை தவறியுள்ளார் எனத் திருப்திப்பட்டுள்ளதாலும், சொல்லப்பட்ட கடன் வசதிகளின் காரணமாக சொல்லப்பட்ட ஈடுவைத்தவரிடமிருந்து யூனியன் வங்கிக்கு வருமதியானதும் மற்றும் சேர வேண்டியதுமான 2018.02.05 ஆந் திகதியில் உள்ளவாறான மொத்த நிலுவை மூன்று கோடி பதினைந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று அறுபத்தேழு ரூபா பதினொரு சதம் (ரூபா 3,15,50,767.11) ஆகிய தொகையையும், 2018.02.06 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மூலதன நிலுவைத் தொகையான ரூபா மூன்று கோடி (ரூபா 3,00,00,000.00) தொகை மீது வருடத்துக்கு 18.5 சதவீத மேலதிக வட்டியையும், மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரமும் யூனியன் வங்கிக்கு மீட்டுக்கொள்வதற்கு உரித்துடைய அனைத்து ஏனைய தொகைகளையும் மீட்டுக்கொள்வதற்காக சகலதும் பிரசித்த நொத்தாரிசு W.S.N. திஸ்சேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேலே சொல்லப்பட்ட 2014.08.01 ஆந் திகதியுடைய 1756ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறி, 2014.09.04 ஆந் திகதியுடைய 1834 ஆம் இலக்க இரண்டாம் தர ஈட்டு முறி, 2015.07.29 ஆந் திகதியுடைய 2217ஆம் இலக்க மூன்றாம் தர ஈட்டுமுறி, 2014.08.01 ஆந் திகதியுடைய 1759 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறி, 2014.09.04 ஆந் திகதியுடைய 1836 ஆம் இலக்க இரண்டாம் தர ஈட்டு முறி, 2015.07.29 ஆந் திகதியுடைய 2221ஆம் இலக்க மூன்றாம் தர ஈட்டுமுறி, 2014.09.04 ஆந் திகதியுடைய 1832ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறி, 2015.07.29 ஆந் திகதியுடைய 2225ஆம் இலக்க இரண்டாம் தர ஈட்டு முறி, 2016.10.07 ஆந் திகதியுடைய 2689 ஆம் இலக்க மூன்றாம் தர ஈட்டுமுறி, 2014.01.27 ஆந் திகதியுடைய 1548 ஆம் இலக்க ஆரம்ப ஈட்டு முறி, 2014.10.24 ஆந் திகதியுடைய 1891ஆம் இலக்க இரண்டாம் ஈட்டு முறி, 2015.07.29 ஆந் திகதியுடைய 2219ஆம் இலக்க மூன்றாம் தர ஈட்டுமுறி என்பற்றின் கீழும் மற்றும் அவற்றின் பயனாலும் யூனியன் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நன்காவது அட்டவணைகளில் நன்கு விபரிகப்பட்ட ஆதனங்களை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளராகிய திரிவங்க அன்ட் சேனாநாயக்க ஒக்ஷனியாஸ் நிறுவனத்திற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

### முதலாம் அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் பிடிகல் கோரளை தெற்கு யடகலன் பற்று, 531B மெததொடுவ கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் நாத்தாண்டிய பிரதேச செயலக எல்லைகளுக்குள்ளும் தொடுவாவ தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள தொடுவாவ எஸ்டேட் மற்றும் பலுகஹஹேன எனவும் அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ.டப்ளியூ.பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999.04.14 ஆந் திகதியுடைய 1712 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 02 என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு : வீதி (பி/ச); கிழக்கு: 4473ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் D; தெற்கு : 1712 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 01; மேற்கு : 1712 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 03 (8 அடி அகல பாதைக்கான ஒதுக்கம்) ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு முப்பத்தேழு தசம் மூன்று இரண்டு பர்ச்சஸ் (0ஏ. 0றூ. 37.32பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு இதனகத்தே உள்ள சகலதையும் உள்ளடக்கி மாரவில காணிப் பதிவகத்தில் K165/55 மற்றும் 56 இருமடியிலக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே சொல்லப்பட்ட காணி அண்மையில் மேற்கொள்ளப் பட்ட அளவீட்டுக்கு ஏற்ப பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது,

வடமேல்மாகாணம்,புத்தளம்மாவட்டத்தில்பிடிகல்கோரளை தெற்கு யடகலன் பற்று, 531B மெததொடுவ கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் நாத்தாண்டிய பிரதேச செயலக எல்லைக்குள் தொடுவாவ தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள தொடுவாவ எஸ்டேட் மற்றும் பலுகஹஹேன எனவும் அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ. டப்ளியூ பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 2011.02.04 ஆந் திகதியுடைய 5064 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 01 என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு : அந்தோனியார் மாவத்த; கிழக்கு : 4473 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டும் D; தெற்கு : 1712ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 01; மேற்கு: 1712 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 03 (8 அடி அகல பாதைக்கான ஒதுக்கம்) ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு முப்பத்தேழு தசம் மூன்று இரண்டு பர்ச்சுகள் (0ஏ. 0றூ. 37.32பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு இதனகத்தே உள்ள சகலதையும் உள்ளடக்கியது.

பின்வரும் காணியின் வழியேயும் மற்றும் அதற்கு மேலாலும் உள்ள பாதை உரித்துக்கு உட்பட்டது.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் பிடிகல் கோரளை தெற்கு யடகலன் பற்று, 531B மெததொடுவ கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் நாத்தாண்டிய பிரதேச செயலக எல்லைகளுக்குள்ளும் தொடுவாவ தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள தொடுவாவ எஸ்டேட் மற்றும் பலுகஹஹேன எனவும் அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ. டப்ளியூ. பர்னாந்து. அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999.04.14 ஆந் திகதியுடைய 1712 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்படு துண்டம் 03 (8 அடி அகல பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு : வீதி (பி/ ச); கிழக்கு : 1712 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 02; தெற்கு : 1712 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 01; மேற்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் வர்னன் பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1964.11.21 ஆந் திகதியுடைய 2061ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் E1 ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு நான்கு தசம் ஐந்து ஒன்பது பேர்ச்சுகள் (00ஏ. 0றூ. 4.59பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு இதனகத்தே உள்ள சகலதையும் உள்ளடக்கியது.

### இரண்டாம் அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் பிடிகல் கோரளை தெற்கு யடகலன் பற்று, தொடுவாவ வடக்கு கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் நாத்தாண்டிய பிரதேச செயலக எல்லைகளுக்குள் தொடுவாவ கிராமத்தில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் D480 கொண்ட பலுகஹவத்த என அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். டென்வர் பர்னாந்து. அவர்களால் தயாரிக்கப்பட்ட 1992.11.18 ஆந் திகதியுடைய 7391 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 1B என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு : ரஞ்சனி பெரேரா என்பவரின் காணி; கிழக்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். டீ. பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 7391 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 2; தெற்கு : கிரேஸ் மேரி லுசில்டா அவர்களின் காணி மற்றும்; மேற்கு : சொல்லப்பட்ட 7391ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 01A ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு இருபத்தி இரண்டு தசம் எட்டு ஏழு ஐந்து பர்ச்சுகள் (0ஏ. 0றூ. 22.875பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு இதனகத்தே உள்ள சகலதையும் உள்ளடக்கி மாரவில காணிப்பதிவகத்தில் K165/57 மற்றும் 58 இருமடியிலக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே சொல்லப்பட்ட காணி அண்மையில் மேற்கொள் ளப்பட்ட அளவீட்டுக்கு ஏற்ப பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது,

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் பிடிகல் கோரளை தெற்கு யடகலன் பற்று, தொடுவாவ வடக்கு கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் நாத்தாண்டிய பிரதேச செயலக எல்லைகளுக்குள் தொடுவாவ கிராமத்தில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் D480 கொண்ட பலுகஹவத்த என அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எஸ். ஏ. பொன்சேகா. அவர்களால் தயாரிக்கப்பட்ட 2012.05.06 ஆந் திகதியுடைய 0049 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 2 என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு : கிங்ஸ்லி டயஸ் என்பவரின் காணி; கிழக்கு : கிரேஸ் மேரி லுசில்டா அவர்களின் காணி; தெற்கு : கிரேஸ் மேரி லுசில்டா அவர்களின் காணி மற்றும்; மேற்கு : சொல்லப்பட்ட 0049ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 3 (10 அடி அகல பாதை) மற்றும் சொல்லப்பட்ட 0049ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 01 மற்றும் உரிமம் பெற்ற நில. அளவையாளர் எம். டீ. பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 7391 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 1A இன் எஞ்சிய பாகம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு இருபது தசம் ஆறு பேர்ச்சு (0ஏ. 0றூ. 20.6பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு இதனகத்தே உள்ள சகலதையும் உள்ளடக்கியது.

பின்வரும் காணியின் வழியேயும் மற்றும் அதற்கு மேலாலும் உள்ள பாதை உரித்துக்கு உட்பட்டது.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் பிடிகல் கோரளை தெற்கு யடகலன் பற்று, தொடுவாவ வடக்கு கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் நாத்தாண்டிய பிரதேச செயலக எல்லைகளுக்குள் தொடுவாவ கிராமத்தில் அமைந்துள்ள பலுகஹவத்த என அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எஸ். ஏ. பொன்சேகா. அவர்களால் தயாரிக்கப்பட்ட 2012.05.06 ஆந் திகதியுடைய 0049 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 03 (10 அடி அகல பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு : சொல்லப்பட்ட 0049 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 01; கிழக்கு : சொல்லப்பட்ட 0049 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 02; தெற்கு : கிரேஸ் மேரி லுசில்டா அவர்களின் காணி மற்றும்; மேற்கு : பிரதேச சபை வீதி ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு இரண்டு தசம் இரண்டு பேர்ச்சு (0ஏ. 0றூ. 2.2பே.)

விஸ்தீரணத்தையும் கொண்டு இதனகத்தே உள்ள சகலதையும் உள்ளடக்கியது.

### மூன்றாவது அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் பிடிகல் கோரளை வடக்கு யாகம் பற்று, ஹெனேபொல கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் மாதம்பை பிரதேச செயலக எல்லைகளுக்குள் ஹெனேபொல கிராமத்தில் அமைந்துள்ள ஹெனேபொல எஸ்டேட் என அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. ஏ. விமலசேன. அவர்களால் தயாரிக்கப்பட்ட 2013.05.10 ஆந் திகதியுடைய 2747B ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 02 என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு : நில அளவையாளர் ஏ. ஏ. விமலசேன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2747ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 2; கிழக்கு : எஸ். ஏ. சுனிமல் மற்றும் ஏனையோர்களின் காணி மற்றும் 12 அடி அகலப் பாதை; தெற்கு : வர்னன் பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 6501 இல் துண்டம் B இன் எஞ்சிய பாகம் ; மேற்கு : வரைபட இல. 2747B இல் துண்டம் 1 ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு இரண்டு ஏக்கர்கள், இரண்டு றூட்கள் மற்றும் ஆறு தசம் ஐந்து பர்சக்ள் (02ஏ. 02றூ. 06.5பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு அதனகத்தே உள்ள சகலதையும் உள்ளடக்கி சிலாபம் காணிப் பதிவகத்தில் F13/107 இருமடியிலக்கங்களில் பதிவு செய்யப்பட்டு, F13/125 பக்கத்துக்கு முன் கொண்டு வரப்பட்டது.

பின்வரும் காணியின் பாதை வழியேயும் மற்றும் அதற்கு மேலாலும் உள்ள பாதை உரித்துக்கு உட்பட்டது.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் பிடிகல் கோரளை வடக்கு யாகம் பற்று, ஹெனேபொல கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் மாதம்பை பிரதேச செயலக எல்லைகளுக்குள் ஹெனேபொல கிராமத்தில் அமைந்துள்ள ஹெனேபொல எஸ்டேட் என அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. ஏ. விபுலசேன. அவர்களால் தயாரிக்கப்பட்ட 2014.09.02 ஆந் திகதியுடைய 2747D ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 01 (12 அடி அகல பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு : எஸ். ஏ. சுனிமல் மற்றும் ஏனையோர்களின் காணி; கிழக்கு : பிரதேச சபை வீதி; தெற்கு: அதே காணியின் எஞ்சிய பாகம்; மேற்கு : நில அளவையாளர் ஏ. ஏ. விமலசேன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2013.05.10 ஆந் திகதியுடைய வரைபட இல. 2747B இல் துண்டம் 2 ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு மூன்று தசம் ஆறு பேர்ச்சகள் (0ஏ. 0றூ. 3.6பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு சிலாபம் காணிப் பதிவகத்தில் F45/74 இருமடியிலக்கங்களில் பதிவு செய்யப்பட்டது.

### நான்காம் அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் பிடிகல் கோரளை தெற்கு யடகலன் பற்று, 531 மெததொடுவ கிராம அலுவலர் பிரிவிலும் மற்றும் நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைகளுக்குள்ளும், மஹவெவ பிரதேச செயலக எல்லைக்குள்ளும் மெத தொடுவாவ கிராமத்தில் அமைந்துள்ள P48 பலுகஹஹேன, M481 பலுகஹஹேன மற்றும் தொடுவாவ எஸ்டேட் இன் பாகம் எனவும் அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர். எப். எச். பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 2005.08.13 ஆந் திகதியுடைய 4886 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 02 என அடையாளமிடப்பட்ட காணி - வடக்கு : அந்தோனியார் மாவத்த; கிழக்கு : 8 அடி அகலப்பாதை மற்றும் வினிப்ரீடா மற்றும் கீர்தி என்பவர்களின் காணி ; தெற்கு : சந்த்ராணி மற்றும் ஜேன் என்பவர்களின் காணிகள்; மேற்கு : 4886 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 1 ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் மற்றும் ஐந்து தசம் ஒன்று பேர்ச்சு (0ஏ. 1றூ. 5.1பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு அதனகத்தே உள்ள சகலதையும் உள்ளடக்கி மாரவில காணிப்பதிவகத்தில் K166/75 இருமடியிலக்கத்தில் பதிவு செய் யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இனோகா ஜயவர்தன,
பணிப்பாளர் சபையின் செயலாளர்.

6-540

---

### செலான் வங்கி பீ.எல்.சீ

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q. 9 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகள் சட்டத்தின் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 04 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்

இத்தால் அறியத்தரப்படுவதாவது, 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகள் சட்டத்தின் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 08 ஆம் பிரிவின் கீழ் 2018.04.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:-

கிளை : கடவத்த
கணக்கு இலக்கம் : 0280 - 012742266 - 001

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பதிவு இலக்கம் : P.Q. 9) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலான் வங்கி பீஎல்சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு K. D. T. K. கலுஆராச்சி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.12.23 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1454 மற்றும் 1455 ஆம் இலக்க பிணை முறிகளின் கீழ் "கடன் பெற்றவரான" 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கையில் முறையாக கூட்டிணைக்கப்பட்ட

கம்பனியான PV 117452 பதிவு இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இராஜகிரியில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கொண்டுள்ள Pixar Holdings (PVT) Ltd என்ற கம்பனியானது பிணைப்பத்திரம் எழுதிக் கொடுத்தவர் என்ற வகையில், தவணைக் கடன் வசதி I ன் மீது 2017, திசெம்பர் 19 ஆந் திகதியன்று ஐம்பத்தொன்பதுஇலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது ரூபா முப்பத்தொரு சதத் (ரூபா 59,89,969.31) தொகை மற்றும் அத்தொகை மீது 2017, திசெம்பர் 20 ஆந் திகதி தொடக்கம் (20%) இருபது வீத வருட வட்டியுயான ஐம்பத்தாறு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து முன்னூற்று இருபத்தாறு ரூபா நாற்பத்து நான்கு சதத் (ரூபா 56,36,326.44) தொகை செலுத்தப்பட வேண்டிய கடன் தொகையாக நிற்பதால் அத்தொகை மீது மேற் சொல்லப்பட்டவாறான வட்டியையும் மற்றும் விளம்பர செலவுகளையும், ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுதவற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் உரிய 1454, மற்றும் 1455 ஆம் இலக்க முறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்ட இதன் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு துசித்த கருணாரட்ண என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகள் சட்டத்தின் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெல்கந்த காணிப்பதிவகப் பிரிவிற்குள், சல்பிட்டி கோரளை, பல்லேபத்துவ பகுதியில், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலாளர் மற்றும் மாநகர சபை எல்லைக்குள் 522 B - பிட்டகோட்டை மேற்கு கிராம அலுவலர் பிரிவிற்குள் - பிட்டகோட்டையில் அமைந்துள்ள "குடாவலவத்த மறுபெயர் கூனகஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான திரு. M. L. N. பெரேரா என்பவரால், 2009.03.19 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4511 என்ற இலக்க நில வரைபடத்தில் லொட் 22 எனக் குறிப்பிடப்பட்ட காணித் துண்டு மற்றும் அதில் உள்ள சகலவற்றையும் உள்ளடக்கிய காணியின் எல்லைகளாவன– வடக்கு : வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 25/1 மற்றும் 33 (எப்பிட்டாமுல்ல வீதி); கிழக்கு : லொட் இலக்கம் 23; தெற்கு : லொட் இலக்கம் 07; மேற்கு : லொட் இலக்கம் 21 முதலான காணித்துண்டுகளும் ஆகும். அதன் பரப்பளவானது பத்து பேர்ச் (00ஏ. 00றூ. 10பே.) ஆகும். அத்துடன் அதில் அமைந்துள்ள மரங்கள், தாவரங்கள் மற்றும் கட்டிடங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய யாவும் ஆகும்.

மேற்குறிப்பிட்டப்படும் காணியானது காணி வரைபடம் (Co) 169A, இல் லொட் 22 எனக்காட்டப்பட்ட காணித்துண்டின் மீள் அளவையாகும்.

மேற்படி பிட்டகோட்டையில் அமைந்துள்ள "குடாவலவத்த" குடாவலவத்த மறுபெயர் கூனகஹவத்த என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான திரு. C. M. D. பெரேரா அபேகுணவர்தன என்பவரால், 1983, செத்தெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் CO/169A, இல் லொட் 22 என அடையாளமிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4511 என்ற இலக்க நில வரைபடத்தில் லொட் 22 எனக் குறிப்பிடப்பட்டு பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டு மற்றும் அதில் உள்ள சகலவற்றையும் உள்ளடக்கிய காணியின் எல்லைகளாவன– வடக்கு : எப்பிட்டாமுல்ல வீதி; கிழக்கு : லொட் இலக்க 23; தெற்கு: லொட் இலக்கம் 07; மேற்கு : லொட் இலக்கம் 21 முதலான காணித்துண்டுகளும் ஆகும் அதன் பரப்பளவானது பத்து பேர்ச் (00ஏ. 00றூ. 10பே.) ஆகும். அத்துடன் அதில் அமைந்துள்ள மரங்கள், தாவரங்கள் மற்றும் கட்டிடங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய யாவும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) K. ஹெச்,
சட்டப் பிரிவின் தலைமை அதிகாரி.

6 - 486

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.*

கடன் கணக்கு இலக்கம் : 1935410
பிலிதுவ போகாவத்தகே பிரேமவத்தி
தொடம்கொடகே பிரியந்த

2017.07.28 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையின் கூட்டமொன்றில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.:-

"கடன் எடுத்த ரனரா பிலிதுவ போகாவத்தகே பிரேமவத்தி மற்றும் தொடம்கொடகே பிரியந்த மற்றும் காணியை ஈடுவைத்த பிலிதுவ போகாவத்தகே பிரேமவத்தி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ சார்பாக அம்பலந்தொட்ட பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். விஜயசிங்கவின் 2008.07.15 திகதியுடைய முறி இலக்கம். 2046 - 2012.06.01 ஆந் திகதியுடைய முறி இலக்கம். 4051 - 2013.06.17 ஆந் திகதியுடைய முறி இலக்கம்: 4590 - 2014.03.05 ஆந் திகதியுடைய முறி இலக்கம்: 5050 மற்றும் 2014.11.14 திகதியுடைய முறி இலக்கம்: 5485 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மேற்படி முறிகள் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன்

பீஎல்சீக்கு 2017.06.13 ஆந் திகதி வரை ரூபா 1,00,85,186.12 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் படி மேற்படி முறி இலக்கங்கள்: 2046, 4051, 4590, 5050 மற்றும் 5485 மூலம் கொமல்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 1,00,85,186.12 வுடனும் மற்றும் ரூபா 93,50,000.00 பணத்தொகைக்கு 2017.06.14 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை மேலதிகவட்டியாக AWPLR+2.5%(தற்சமயம் 14.29%) ஆண்டொன்றுக்கும் ஏல விற்பனை விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு - 12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2 ஆவது மாடியில் ஏலதாரருக்கு திரிவின்கா சேனாநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.".

### அட்டவணை

தென் மாகாணம், ஹம்பந்தோட்ட மாவட்டம் கிழக்கு, கிரவு பத்து அம்பலாந்தோட்ட பிரதேச சபை எல்லையில் அம்பலந்தோட்ட மாவட்ட செயலாளர் எல்லையில் பட்ட அட்ட தெற்கு கிராம அலுவலர் எல்லையில் பட்ட அட்ட கிராமத்தில் உள்ள அரசாங்க காணியின் எல்லைகள்- வடக்கு : டப்ளியூ. ஏ. அருநோலிஸ் காணி; கிழக்கு : ஆர். பி. பேபி யாமி காணி; தெற்கு: உடகம லேன்; மேற்கு : லேன். இக்காணியின் விஸ்தீரணம் (00ஏ. 03றூ. 00பே.) இக்காணியில் உள்ள மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து, இக்காணி ஹம்பந்தோட்ட காணிப் பதிவகத்தில் காணி அபிவிருத்தி சட்டப்படி Ham/14/3012/97 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொல்லப்பட்ட காணி தற்சமயம் வரையப்பட்ட வரைபடம் படி,

தென் மாகாணம், ஹம்பந்தோட்ட மாவட்டம், கிரவு பத்து கிழக்கு, அம்பலாந்தோட்ட பிரதேச சபை எல்லையில் அம்பலந்தோட்ட மாவட்டச் செயலாளர் எல்லையில் பட்ட அட்ட தெற்கு கிராம அலுவலர் எல்லையில் பட்ட அட்ட கிராமத்தில் உள்ள நில அளவையாளர் எல். கே. குணசேகரவின் 2002.05.12 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 3362 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1. காணியின் எல்லைகள் - வடக்கு : டப்ளியூ. ஏ. அர்நோலிஸ் காணி; கிழக்கு : ஆர். பி. பேபி யாமி காணி; தெற்கு : அரசாங்க காணி; மேற்கு : ரோட் ஒதுக்கப்பட்ட காணி. இக்காணியின் விஸ்தீரணம் (00ஏ. 03றூ. 00பே.) இக்காணியில் உள்ள மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து.

(திருமதி) ரஞ்சனி கமகே,
கம்பனிச் செயலாளர்.

6 - 501

---

## செலான் வங்கி பீ.எல்.சீ

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q. 9 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 04 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 08 ஆம் பிரிவின் கீழ் 2018.03.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர் சபையினரால் வங்கியின் உபயோகத்திற்காக ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும்:

கிளை : கட்டுனேரிய
கணக்கு இலக்கம் : 0550-34309237-001

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம் P.Q. 9) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட செலான் வங்கி பீஎல்சீ இன் சார்பில் பகிரங்க நொத்தாரிசு W. S. N. பெர்னாண்டு என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டட 2014.03.20 ஆந் திகதியிடப்பட்ட 1351, 1352 மற்றும் 1353 ஆம் இலக்க முறிகளின் மற்றும் 2011.11.28 ஆந் திகதியிடப்பட்ட 1773, 1774, 1775 ஆம் இலக்க முறிகள் மற்றும் 2015.07.16 ஆந் திகதியிடப்பட்ட 1530 ஆம் இலக்க முறி என்பவற்றின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவர்களான" கட்டுனேரியவில் இருக்கும் அன்ர ஹன்னெதிகே தயா நிஸ்ஸங்க/ வீரக் கொண்டா ஆராச்சிகே கெதரின் பெர்னாண்டோ மறுபெயர் வீரக் கொண்டா ஆராச்சிகே மரியா கெதரின் பெர்னாண்டொ என்ற இருவரும் செலுத்தத் தவறியுள்ளமையால் நிரந்தர மேலதிக பற்று வசதியாகப் பெற்றுக் கொண்ட வசதிகள் என்ற வகையில தற்பொழுது குறித்த ஈட்டு முறிகளின் மீது 2017, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வரை அசல் தொகையாகவும் வட்டித் தொகையாகவும் ரூபா 3,72,28,415.18 சதத்தொகையும் 2017, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி தொடக்கம் மேற்படி தொகைமீது இருபத்து எட்டு வீத (28%) வருட வட்டியும் செலான் வங்கி பீஎல்சீக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதோடு தவணைக் கடன் வசதி பெற்றுக் கொண்ட வகையில் தற்பொழுது குறித்த ஈட்டு முறிகளின் மீது 2017, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வரை அசல் தொகையகவும் வட்டித் தொகையாகவும் ரூபா. 95,17,670.38 சதத்தொகையும் 2017, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி தொடக்கம் மேற்படி தொகைமீது பத்தொன்பது வீத (19%) வருட வட்டியான ரூபா. 9,048,000.00 தொகை செலான் வங்கி பீ.எல்.சீக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதோடு நிரந்தர மேலதிக பற்று + தவணைக் கடன் வசதி என்பவை மீது செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் மொத்தத் தொகையான நான்கு கோடியே அறுபத்தேழு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எண்பத்தைந்து ரூபா ஐம்பத்தாறு (ரூபா 4,67,46,085.56) சதத் தொகை செலுத்தப்பட வேண்டிய கடன் தொகையாக நிற்பதால் அத்தொகை மீது மேற் சொல்லப்பட்டவாறான

வட்டியையும் மற்றும் விளம்பர செலவுகளையும், ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல். சீ யிடம் உரிய ஈட்டு முறிகளான 1351, 1352, 1353, 1773, 1774, 1775 மற்றும் 1530 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் அடகு வைக்கப்பட்ட முறிகளின் அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட ஆதனங்களையும் அதன் வளவுகளையும் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு/ துசித்த கருணாரட்ண என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகள் சட்டத்தின் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) ஏற்பாடுகளின் கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

### முதலாம் அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவு பிரிவிற்குள், பிட்டிகல் கோரளை, யட்டகாலன் பற்று நத்தாண்டிய கிரதேச சபை எல்லைக்குள், மஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவிற்குள், தோடுவாவ வடக்கில் 531/A இலக்க கிராம அலுவலர் பிரிவிற்குள், தோடுவாவ தெற்கு கிராமத்தில் அமைந்துள்ளதும் "நுககஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A. A. விமலசேன என்பவரால் தயாரிக்கப்பட்டதும் 2014.02.19 ஆந் திகதியிடப்பட்டதுமான 5272 ஆம் இலக்க நில வரைபடத்தில் லொட் 02 என அடையாளமிடப்பட்டு பிரித்து வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கு : வீதி (பி.ச); கிழக்கு : W. A. ஜஸ்டின் பெர்னாண்டோ என்பவரால் உரிமைக் கோரப்படும் காணி; தெற்கு : கெலிஸ்டர்வெண்டர்லேண்ட் என்பவரால் உரிமைக் கோரப்படும் காணி; மேற்கு : உத்தரவு பெற்ற நில அளவையாளர் A. A. விமலசேன என்பவரால் தயாரிக்கப்பட்டதும் 1996.05.22 ஆந் திகதியிடப்பட்டதுமான 1217 ஆம் இலக்க நில வரைபடத்தில் லொட் 01 என்ற காணித்துண்டு என்ற எல்லைக்குள் அமைந்துள்ள அதன் பரப்பளவு முப்பது தசம் ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 30.5பே.) ஆகும். அத்துடன் அதில் அமைந்துள்ள மரங்கள், தாவரங்கள் மற்றும் கட்டிடங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய யாவும் ஆகும்.

மேற்குறிப்பிடப்படும் காணியானது கீழ்க் குறிப்பிடப்படும் காணியின் மீள் அளவையாகும்.

